பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 10 வியாழக்கிழமை 22.02.2018 கதிர் 109

## புதிய அமைச்சரவையில் அதிக இளம் எம்.பிக்கள்

கொழும்பு, பெப். 22

இரு பிரதான கட்சிகள் இணைந்த கூட்டு அரசின் இரண்டாவது அமைச்சரவை மாற்றம் இன்று இடம்பெறவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதன்போது, நிதி, சட்டம் ஒழுங்கு, நெடுஞ்சாலைகள், மீன்பிடி மற்றும் நீரியியல் வளங்கள், விளையாட்டு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

பக்கம் 03

# குண்டு வெடிப்பால் தீப்பிழம்பானது பஸ்!

## 12 படையினர், 7 பொதுமக்கள் படுகாயம்!!
## தியத்தலாவை நோக்கிப் பயணித்தவேளை

கொழும்பு, பெப்ரவரி 22

தியத்தலாவை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றுக்குள் குண்டு வெடித்ததால் அது தீப்பிடித்து எரிந்து கருகியது. இந்த அனர்த்தத்தில் சிக்கி 19 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் 11 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

பக்கம் 18



## தியத்தலாவ வெடிப்பு பயங்கரவாதச் செயலல்ல!
### இராணுவம் விளக்கம்

கொழும்பு, பெப்.22

தியத்தலாவை – கஹகொல்ல பகுதியில் தனியார்பஸ்ஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவத்துக்கும் பயங்கரவாதத் தாக்குதலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து தெரிவித்தார்.

ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறி

பக்கம் 18

## நல்லாட்சியை நீடிக்க உடன்பாடு விரைவில்

கொழும்பு, பெப்.22

நல்லாட்சி அரசைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படுமெனச் சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசதகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடை

பக்கம் 18

# நல்லாட்சிக்கு ஆயுள் கெட்டி

### ரணில் - மஹிந்த அமரவீர சபையில் நேற்று அறிவிப்பு

கொழும்பு, பெப். 22

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் முன்னெடுக்கும் கூட்டு அரசு தொடர்ந்து நீடிக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சபையில் அறிவித்தார்.

பக்கம் 18

## குண்டுவெடிப்பினால் பெரும் ஆபத்தில் நாடு!

### மஹிந்த தரப்பினர் கூக்குரல்

கொழும்பு, பெப். 22

பஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து நாட்டின்தேசியபாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூறி

பக்கம் 18

## கைக்குண்டே வெடித்தது

### சபையில் கூறினார் பிரதமர்

கொழும்பு, பெப்.22

யாழ்ப்பாணத்திலிருந்து தியத்தலாவை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று தீப்பற்றிய மைக்குக் கைக்குண்டு ஒன்று வெடித்தமையே காரணம்என்று நாடாளுமன்றில் அறிவிக்கப்பட்டது.

இதனைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும்சட்டம்ஒழுங்குஅமைச்சர் சாகல ரட்ணாயக்க ஆகி

பக்கம் 03

## புலம்பெயர் தமிழர்களுக்கு பயப்படவில்லை ராணுவம்

### 'கழுத்தறுப்பு பிரிகேடியரை' மீள அழைத்தமை தொடர்பில் இராணுவப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, பெப் .22

புலம்பெயர் தமிழர்களுக்குப் பயந்து பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை நாட்டுக்கு அழைக்கவில்லை அரசு.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்

பக்கம் 18

## அன்பின் குறியீடே தாமரை மொட்டு

### சம்பந்தனுக்கு நாமல் பதில்

கொழும்பு, பெப். 22

அன்பினதும் கருணையினதும் குறியீடுதான் தாமரை மொட்டாகும். அதிலிருந்து சுபீட்சமுமே மலரும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைமையும் இணைக்கும்

பக்கம் 18

### இனிது ரகசியம் அல்ல!



யுத்த காலத்தில் பத்திரிகைப் பணி என்பது மிக ஆபத்தானதாக இருந்தது. அதனை நேரில் எதிர்கொண்டவர்களுக்குத்தான் அதன் மனவலியும், உடல் வலியும் புரியும். அந்த அழுத்தம் சொற்களால் வடித்துவிட முடியாதது.

பக்கம் 03

## 9 வயது மாணவியை வன்புணர்ந்த அதிபருக்கு 10 ஆண்டுகள் கடூழியம்

### நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 22

பாடசாலையில் வைத்து 9 வயது மாணவியை வன்புணர்வுக்குட்படுத்திய அதிபருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனைவிதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

பக்கம் 18

### ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு அழுத்தம்!

கொழும்பு, பெப்.22

காணாமற் போனோர் அலுவலகத்தை உரிய முறையில் செயற்படுத்துதல் மற்றும் நிலைமாறு கால நீதிப் பொறிமுறை ஆகியவை தொடர்பில் தான் வெளியிட்ட உறுதிமொழிகளை இனியும் காலம் தாழ்த்தாது

பக்கம் 03

## சம்பந்தனின் தமிழீழக் கருத்து மேற்குலகின் நலன் சார்ந்ததே!

### கூறுகிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப் .22

தாமரை மொட்டுச் சின்னத்திலிருந்தே தமிழீழம் மலருமெனக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தமை தமிழீழ நலன் சார்ந்து அல்ல. இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் நலன்

பக்கம் 03



# மஹிந்தவால் பலருக்குமே ஏமாற்றம்தான்



## கூறுகிறார் ராஜித

கொழும்பு, பெப்ரவரி 22

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் தொடர்பான விடயத்தில் ஒரு தரப்பினர் மாத்திரமல்ல, ஊடகவியலாளர்களும் ஏமாந்துள்ளனர் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எங்களுக்கு அவரைப் பற்றி நன்றாகத் தெரியும். இன்று, நேற்று வந்தவர்களுக்குத் தெரியாவிட்டாலும் 30, 40 வருடங்கள் அவருடன் பழகியவர்கள் என்பதால், எமக்கு அவரைப் பற்றித் தெரியும்.

இந்தப் பக்கத்தில் உள்ளவர்களுடனும் பேசுவார், மறுபக்கத்தில் உள்ளவர்களிடமும் பேசுவார். இதுதான் மஹிந்த ராஜபக்ஷ.

ரணில் விக்கிரமசிங்கவை நீக்க முழுமையான போராட்டத்தை முன்னெடுங்கள் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரிடம் கூறுவார்.

மறுபுறம் தொடர்புகொண்டு ரணில் நீங்கள் ஏன் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று கூறுவார். இதுதான் பிரச்சினை.

இதேபோலவே தேசிய பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பிலும் மஹிந்தவின் அணுகுமுறை காணப்படுகிறது.

தமிழ் மக்களிடம் ஒன்றைக் கூறுவார், சிங்கள மக்களிடம் வேறு ஒன்றைக் கூறுவார். தெற்கில் ஒன்றையும் வடக்கில் ஒன்றையும் கூறுவார்.

இப்படியான தலைவர்களுடன் நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்பதை புத்தியுள்ளவர்களான நீங்களும் அறிவுடன் எண்ணிப் பாருங்கள் - என்றார். (ஐ)

# மன்னாரில் கடும் வறட்சி

## விவசாயிகள் பெரும் பாதிப்பு



மன்னார், பெப்.22

மன்னார் மாவட்டத்தில் மழையின்மையால் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக முருங்கன் கட்டுக்கரைக் குளத்தில் நீர் வற்றிப்போயுள்ளது. இதனால் விவசாயிகள் தமது விவசாயச் செய்கைக்கு நீர் இன்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் நடப்பு வருடத்துக்கான காலபோக நெற்செய்கையில் 30 ஆயிரம் ஏக்கர் செய்கைநடைபெறுகின்றது.

இந்தப் பகுதி விவசாயிகள் கட்டுக்கரைக் குளத்தை நம்பியே விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். தொடர்ச்சியாக மழை பெய்யாமையாலும், தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியின் காரணமாகவும் கட்டுக்கரை குளத்தில் நீர் வற்றியுள்ளது. இதனால் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள நீர் இல்லாமல் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.

விவசாயத்துக்காக விவசாயக் காணிகளில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளில் கூட நீர் வரத்து குறைந்து காணப்படுகின்றது எனவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

அதிகளவான விவசாயிகளின் பயிர்கள் கதிர் விட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் நீர் இல்லாமை பயிர்களை அழிவடையச் செய்யும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தமது பாதிப்புத் தொடர்பாக அதிகாரிகள் யாரும் வந்து கேட்டறியவில்லை எனஅவர்கள் கூறுகின்றனர்.

நகைகளை ஈடுவைத்தும், தமது கால்நடைகளை விற்றும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் எனவும், இந்நிலை தொடருமாக இருந்தால் மன்னார் மாவட்ட விவசாயிகள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர். (ஐ)

# கட்சி மாறினால் பதவி பறிபோகும்

## உள்ளூராட்சி அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, பெப்.22

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்கள் கட்சிமாறினால் அவர்களின் பதவி பறிக்கப்படும் என்று உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு எச்சரித்துள்ளது.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சினால் நேற்று விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் கட்சி மாறினால் அவர்களின் பதவியைப் பறிக்கும் அதிகாரம் கட்சிகளின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகள் தேர்தல் சட்டத்தின் 10(அ) பிரிவில் எந்தவொரு கட்சியின் செயலாளரும் தமது கட்சி சார்பில் தெரிவான உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை ரத்துச் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு எழுத்துமூலம் அறிவிக்கலாம்.

அந்தக் கோரிக்கையில் நியாயம் இருப்பதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி கருதும்பட்சத்தில் அந்த உறுப்பினரின் பதவியை ரத்துச் செய்து, கட்சிச் செயலாளர் பரிந்துரைக்கும் வேறொரு நபருக்கு வழங்க முடியும். இதன் காரணமாகக் கட்சி மாறும் நபர்கள் தங்கள் பதவிகளை இழக்க நேரிடும் - என்றுள்ளது. (ஐ)

# அமைச்சர் சுவாமிநாதனுடன் கோடீஸ்வரன் எம்.பி. பேச்சு



கொழும்பு, பெப்.22

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இன்று ஏ.கே.கோடீஸ்வரன் பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது அம்பாறை மாவட்டத் தமிழ்ப் பிரதேசங்களில் இந்துமத விவகார அலுவல்கள், நீர்ப்பாசனக்குளங்கள், வீடமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஆலையடி வேம்பு இந்துமாமன்ற தலைவர் வே.சந்திரசேகரம், பிரதம கணக்காளர் எஸ்.கனகரத்தினம், செயலாளர் ஆ. அமிர்தானந்தன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (ஐ)

# பதவி இழக்கின்றனர் ஐ.தே.க. அமைச்சர்கள்

கொழும்பு, பெப்.22

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர்கள் இருவரின் அமைச்சுப் பொறுப்புகளை விலக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லாட்சி அரசின் அமைச்சரவை மாற்றத்தின்போது இவர்களின் அமைச்சுப் பதவிகள் நீக்கப்படவுள்ளன.

அதற்குப் பதிலாக அந்த அமைச்சர்கள் இருவரும் பொறுப்புகள் அற்ற சிரேஷ்ட அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

அவர்கள் இருவரும் வகித்த அமைச்சுப் பதவிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் அரசியல்வாதிகள் இருவருக்கு வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# வெற்றிலையை மென்றவாறு மீன் விற்றவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், பெப்.22

ஊர்காவற்றுறை மீன் சந்தையில் வெற்றிலை மென்றவாறு கடலுணவுகளை விற்பனை செய்த பெண்ணுக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார்.

ஊர்காவற்றுறை மீன்சந்தையில் வெற்றிலை மென்றவாறு கடலுணவுகளை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவருக்கு எதிராகப் பொது சுகாதாரப் பரிசோதகர் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கு நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

பெண் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவரை எச்சரித்த நீதிவான், 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டார். (ஐ)

# திருநாவற்குளத்தில் மாட்டியது முதலை



வவுனியா, பெப்.22

வவுனியா, திருநாவற்குளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் நுழைய முற்பட்ட முதலை ஒன்று இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

வவுனியா, திருநாவற்குளத்தில் உள்ள வீடு ஒன்றினுள் நுழைய முற்பட்ட 5.5 அடி நீளமான முதலை இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு வன ஜீவராசி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் பெரும் அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக வவுனியாவில் நிலவிவரும் வறட்சி காரணமாகக் குளங்களில் உள்ள நீர் வற்றிக் காணப்படுவதனாலே இந்நிலை ஏற்பட்டுள்ளது

(ஐ-100)

காலைக்கதிர்
Kalaikkathir



## இனி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேனாவுக்கு நீதியாக நடத்தல் என்பது ஒரே நாளில் வீட்டுக்கும் அனுப்பும்; கூட்டுக்கும் அனுப்பும்; பெட்டியிலும் அனுப்பும்.

அந்தக் காலத்தில் அந்தப் பணி, பெற்றோல் பவுஸருக்குள்ளால் தீப்பந்தம் கொண்டு போகின்ற வேலை போன்று இருந்தது.

யுத்தம் முடிவடைந்து விட்டதால், கொஞ்சம் மூச்சு விட்டுப் பணியைத் தொடரலாம் என்றால், அப்படியல்ல என்கின்றன களநிலைமைகள். ஒருபுறம் சட்டம், மறுபுறம் சமூக ஊடகங்கள். கொஞ்சம் அசந்தால் காலை வாரிவிடும் எழுத்தாளர்கள், செய்தியாளர்கள். அல்ல ாடுகின்றனர் பத்திரிகை ஆசிரியர்கள்.

நேற்று ஒரு பத்திரிகை ஆசிரியர் எதிர்கொண்ட சிக்கல் வாழ்க்கைக் காலம் முழுவதும் அவர் மனதை அழுத்தி நிற்கும் போல் தோற்றுகின்றது. நடந்தவை இவைதான்:–

இரண்டு காலும் பாதிக்கப்பட்ட மாற்று வலுவுடைய மனிதர் ஒருவருக்கு பொது நிறுவனம் ஒன்றில் வேலை வழங்கியிருந்தார்கள். வேலைக்கு வரும் சமயங்களில் தனது வீட்டு நெருக்கடிகள் குறித்துத் தனது சக பணியாளர்களுடன் மனம் திறந்து பேசி, கருத்துக்களைப் பகிர்ந்து, அதன் மூலம் தம்மைத் தாமே ஆற்றுப்படுத்திக் கொள்வது அவர் வழமை. கஷ்டங்களைக் கடவுளிடமோ, நெருங்கிய சகாக்களிடமோ பகிர்ந்து கொள்ளுதல் – கொட்டித் தீர்த்தல் – ஒரு வகை மன ஆற்றுப்படுத்தல் தானே...!

தனது மகனின் திரு விளையாடல்களினால் – குற்றத்தனமான வேலைகளினால் – தமக்கு ஏற்பட்டுள்ள மன அழுத்தங்களையும் அவர் இப்படிப் பகிர்ந்து கொண்டிருந்திருக்கின்றார்.

அதை செவிமடுத்த எழுத்தாளர் ஒருவர் நிஜக் கதையை இலக்கியமாக்குகிறேன் என்று நினைத்துக் கொண்டு, சம்பந்தப்பட்டவர்களின் பெயர், விவரங்கள், வேலைத்தளங்கள் பற்றிய விடயங்கள் எல்லாவற்றையும் அப்படியே மாற்றாமல் குறிப்பிட்டு ஒரு சிறு கதையை எழுதி பத்திரிகை அலுவலகத்துக்கு அனுப்பி விட்டார்.

அந்தச் சிறுகதைக்குள் புதைந்து கிடக்கும் உட்சூக்குமம் தெரியாத பத்திரிகை ஆசிரியரோ, உதவி ஆசிரியரோ அதை அப்படியே பிரசுரித்து விட்டார்கள்.

வந்தது வினை. சம்பந்தப்பட்ட மனிதரை அவரது மகன் தொல்லைப்படுத்தத் தொடங்கினான். இம்சைப்படுத்தவும் செய்தான்.

“உன்னால், எனக்குச் சமூகத்தில் தலைகாட்ட முடியவில்லை'' என்று கூறி தந்தையை வையவும் செய்தான். மோசமாகவும் நடத்தினான்.

பொறுக்க முடியாமல் போன அந்த மாற்றுத்திறனாளி நபர் பத்திரிகை அலுவலகத்துக்குச் சென்று முறையிட்டார். நிவாரணம் கிடைக்கவில்லை. பத்திரிகை முறைப்பாட்டுக் குழு அலுவலகத்துக்குச் சென்று புகார் செய்தார். மாதங்கள் கடந்தனவே தவிர பயனில்லை. ஆனால் மறுபுறத்திலோ வீட்டில் தொல்லை எல்லை மீறியது.

தாங்க முடியாத அவர் நேற்று ஒரு வேலை செய்தார். மண்எண்ணைக் கானுடன் புறப்பட்டார். பத்திரிகை முறைப்பாட்டுக் குழு அலுவலகம் இன்னொரு பத்திரிகை அலுவலகப் பக்கத்தில் இயங்கியது. வெறுமனே முறைப்பாடுகளைப் பெற்று கொழும்புக்கு அனுப்பும் பணியைத்தான் அந்த அலுவலகம் செய்துகொண்டிருந்தது. அங்கு பொறுப்பான அலுவலர்கள் இல்லை என்றும் கூறப்பட்டது.

என்னால் இனியும் இப் பிரச்சினையைத் தாங்கிக் கொண்டு வாழ முடியாது என்று கூறிய அந்த நபர், மண்எண்ணையை உடலில் ஊற்றித் தனக்குத் தானே தீவைக்க முயன்றார். நல்ல காலம், அந்தப் பத்திரிகை அலுவலகத்தில் இருந்தோர் தீ வைக்க விடாமல் அவரைத் தடுத்து விட்டனர். ஆனால் மண்எண்ணைய் நுரையீரலுக்குள் புகுந்ததால் மோசமான நிலையை அடைந்த அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து விரையப்பட்டார். இப்போது தற்கொலை முயற்சிக்காக பொலிஸ் விசாரணையும் அவருக்கு எதிராக முளைத்திருக்கின்றது. பாவம் அந்த மாற்றுத் திறனாளி.

அதை விடப் பாவம் பத்திரிகை ஆசிரியர். யாரோ எழுதிய சிறுகதைக்காக இனி அவரையும் வறுத்து எடுப்பார்கள்.

எனினும், அந்த மாற்றுத் திறனாளிக்கு ஏதோ ஒரு வகையில் அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றமையைப் புரிந்து கொண்டதும், சம்பந்தப்பட்ட தரப்புகளை அழைத்து சமரசம் செய்து, சமாளித்து, சுமுகமாக்க முயற்சி எடுத்திருக்கலாம். அது நடக்காதது தவறுதான்.

ஓர் எழுத்தாளரின் விபரீத விளையாட்டுக்காகப் பத்திரிகை ஆசிரியர் பந்தாடப்படுகின்றமை அதிருப்தியைத் தருகின்றது தான். ஆனால் அதுதானே பத்திரிகை ஆசிரியப் பணி!

செய்தியாளர்கள், உதவி ஆசிரியர்கள் முதற் கொண்டு ஒப்புநோக்கர் வரை அனைவரும் விடும் தவறுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டிய கட்டாயக் கடப்பாடு (Vicarious Liability) பத்திரிகை ஆசிரியருடையது அல்லவா...! அவர் அவற்றை எதிர்கொள்வது தவிர்க்க முடியாதது.

**- மின்னல் -**

## ஐரோப்பிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும்.

– இப்படி ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்திருக்கின்றது.

இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம் இதனை தனது ‘டுவீட்’ செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

காணாமற்போன தங்களின் உறவுகளுக்கு நேர்ந்த கதி குறித்துத் தெளிவு கிட்டாதவரை இலங்கையர் பலர், தேசிய நல்லிணக்க நடவடிக்கைகளில் தங்களை இணைத்து கொள்ள முடியாத நிலையிலேயே இருப்பர் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

காணாமற்போன தங்கள் உறவுகளைத் தேடி கிளிநொச்சியில் மக்கள் நடத்தும் போராட்டம் இவ்வார முற்பகுதியில் ஒரு வருடத்தை எட்டிய நிலையில், அதை ஒட்டித் தான் வெளியிட்ட செய்திலேயே ஐரோப்பிய ஒன்றியம் மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளது.

(உ)

## ‘மக்கள் நீதி மய்யம்’ — கமலின் புதிய கட்சி

கமல்ஹாசன் ’மக்கள் நீதி மய்யம்’ என்ற தன் கட்சிக்காக மய்யம்.காம் என்ற அதிகாரபூர்வ இணைய தளத்தை தொடங்கியுள்ளார்.

மதுரை ஒத்தக்கடை பொதுக்கூட்ட மைதானத்தில் நேற்று தனது கட்சியின் கொடியை கமல்ஹாசன் ஏற்றினார். பிறகு ’மக்கள் நீதி மய்யம்’ தான் தன் கட்சியின் பெயர் என்று கமல் அறிவித்தார்.

# மார்ச் இறுதியில் கம்பன் விழா

கொழும்பு, பெப்.22

இவ்வாண்டு மார்ச் மாதம் 01,2,03,04 ஆகிய திகதிகளில் நடைபெறுவதாக இருந்த அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கொழும்புக் கம்பன் விழா கொழும்புக் கம்பன் கழகத் தலைவர் தெ.ஈஸ்வரனின் மறைவையொட்டி பிற்போடப்பட்டது.

அவ்விழாவை எதிர்வரும் மார்ச் 29,30,31 ஏப்ரல் 1 ஆகிய திகதிகளில் நடத்துவதென கொழும்புக் கம்பன் கழகம் முடிவு செய்துள்ளது. மார்ச் 29 ஆம் திகதி மாலை வெள்ளவத்தை ஐஸ்வர்ய லக்ஷ்மி திருக்கோயிலிலிருந்து கம்பன் பட ஊர்வலத்துடன் ஆரம்பமாகி ஏப்ரல் 1 ஆம் திகதி மாலை நிறைவு பெறவுள்ளது.

வழமை போலவே இவ்வாண்டும் நம் ஈழத் தமிழறிஞர்களாடு தமிழகத்திலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பல அறிஞர்கள் இவ்விழாவில் பங்கற்கவுள்ளனர். இவ்விழாவில் எழிலுரை, சுழலும் சொற்பார், பட்டிமண்டபம் கவியரங்கம், சிந்தனை அரங்கம், கருத்தரங்கம், நாடக அரங்கம், வழக்காடு மன்றம் போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் உலகளாவிய சாதனை செய்த அறிஞர்க்கான கம்பன் புகழ் விருதும், நம் மூகத்தின் முன்னாடிகளாகத் திகழும் அறுவருக்கான சான்றார் விருதும் வழமை போலவே வழங்கப்படவுள்ளதுடன், “நாவலர் விருது”, ‘விபுலானந்தர் விருது’, ‘ஏற்றமிகு இளைஞர் விருது’, மகரந்தச் சிறகு விருது’, ‘நுழைபுல விருது’ ஆகிய விருதுகளும் புலமைசார் அறிஞர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

இவைதவிர இளைஞர்களை ஊக்குவிக்குமுகமாக நடத்தப்படும் கவிதைப் போட்டி, பேச்சுப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டிஎன்பனவும்இம்முறையும் நடைபெறவுள்ளன. இவ்விழாவில் கலந்துகொள்ள விரும்பும் பராளர்களும் மாணவர்களும் (மாணவர்கள், அதிபர் அல்லது பொறுப்பாசிரியரூடாக விண்ணப்பிக்க வேண்டும்) கழகத்துடன் தொடர்பு கொண்டால் விழாவில் அவர்களுக்கான இருக்கை, உணவு வசதிகள் செய்து தரப்படும் என கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

விழா நாள்களில் மண்டப வாயிலில் பிரபல புத்தகப் பதிப்பாளர்களால் புத்தகக் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது. இக்கண்காட்சியில் இலக்கிய ஆர்வலர்கள் மலிவு விலையில் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளும் ஒழுங்கும் செய்யப்பட்டுள்ளது எனவும் கம்பன் கழகம் அறிவிதத்துள்ளது.

மற்படி விவரங்கள் சம்பந்தமாக கழகத்துடன் தொடர்பு கொள்ள விரும்புவார் 236 0525, 077 293 5509 என்ற இலக்கங்களில் ஒன்றுடன் தொடர்பு கொள்ளமுடியும்.

## சம்பந்தனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் தான் அவர் அவ்வாறு கூறினார்.

– இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

நேற்றுக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாயகம், தேசியம், சுயநிர்ணயத்தைக் கைவிட வேண்டுமென்று தெரிவித்தது. போர் முடிவடைந்ததால் எங்களிடம் பலமில்லை என்றும், தருவதை ஏற்கவேண்டுமென்றும் சம்பந்தன் கூறியிருந்தார். அத்தோடு தமிழ்த் தேசியவாதத்தை நீக்குகின்ற செயற்பாட்டையும் கூட்டமைப்பு முன்னெடுத்திருந்தது.

சிங்கக் கொடி பிடித்தல், சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொள்ளல் போன்றவற்றுடன் நடைமுறைச் சாத்தியமான தீர்வை நோக்கியும் சர்வதேசத்தை அனுசரித்து அரசு தருவதைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்றும் அது செயற்பட்டு வந்தது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக புதிய அரசமைப்பின் ஊடாக ஒற்றையாட்சியையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழ்த் தேசிய அரசியலைக் கைவிட்டு இவ்வாறு ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்ட கூட்டமைப்பின் தலைவர் திடீரெனத் தாமரை மொட்டிலிருந்து தமிழீழம் மலருமெனக் கூறுவது தேர்தலில் வடக்கு – கிழக்கில் அவர்களுக்கு ஏற்பட்ட பின்னடைவு காரணமாகவோ, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தக்க வைக்கவேண்டுமென்றோ அல்ல. அதாவது சிங்கள தேசத்தின் நலனுக்காகவும் இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் முகவர்களாகவும் செயற்பட்டவர்கள் மஹிந்தவின் எழுச்சியூடாக இந்த நாட்டில் வேறு சக்திகளுக்கு இடமளிக்கக்கூடாது என்பதற்காகவே அப்படிக் கூறினார்..

ஏனெனில் மஹிந்த சீன சார்புக் கொள்கையைக் கொண்டிருக்கின்றமையால் பூகோள அரசியல் போட்டி காரணமாகவே ஆட்சி மாற்றமொன்றை இந்தியா, மேற்கு நாடுகள் இணைந்து கொண்டுவந்திருந்தன. இவ்வாறான நிலையில் மஹிந்தவின் மீளெழுச்சியை இலங்கைத் தீவின் பூகோளப் போட்டி காரணமாக இந்தியா மற்றும் மேற்கு நாடுகள் விரும்பவில்லை.

இந்த மேற்கு நாடுகளின் நலனடிப்படையில் நின்று கொண்டே சம்பந்தன் நாட்டைப் பிளவுபடுத்த வேண்டாமென்றும், தாங்கள் ஒற்றையாட்சிக்கு இணங்கியிருப்பதால் நாட்டைப் பிளவுபடுத்த தேவையில்லை என்றும் கூறியிருக்கின்றார். இவை எல்லாம் தமிழினம் சார்ந்த செயற்பாடாக ஒருபோதும் இருக்கவில்லை. இதனைத் தமிழ் மக்களும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இதுவரை காலமும் மக்களுக்குப் பச்சைப் பொய்களையும் தமிழ்த் தேசியவாதத்தை நீக்கியதான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வந்த கூட்டமைப்பினர், மேற்கு நாடுகளினது பூகோள அரசியல் போட்டி காரணமாகத் தற்போது இவ்வாறான கருத்தை முன் வைத்திருக்கின்றனர். ஆகவே இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். – என்றார். (ஐ–7)

## கைக்குண்டே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோர் தெரிவித்தனர்.

தியத்தலாவ – கஹகொல்ல என்ற இடத்தில் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. விபத்தில் 7 இராணுவத்தினர், 5 விமானப் படையினர் உள்ளிட்ட 19 பணிகள் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணை முன்னெடுத்திருந்தனர். எனி னும் திட்டவட்டமான காரணம் வெளியிடப் படவில்லை.

இந்த நிலையில் நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த சட்டம், ஒழுங்கு அமைச்சர், பஸ்ஸில் இருந்த கைக்குண்டு ஒன்று வெடித்த தனாலேயே தீ விபத்து ஏற்பட்டது. அந்தக் குண்டு எவ்வாறு வந்தது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

பஸ்ஸில் கைக்குண்டு வெடித்ததாலேயே தீ விபத்து ஏற்பட்டது என்று இராணுவத் தளபதி தனக்கு அறிவித்துள்ளார் எனப் பிரதமர் ரணிலும் சபையில் தெரிவித்தார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய அமைச்சுக்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கூட்டு அரசில் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த அமைச்சுப் பதவி அந்த கட்சிக்குள்ளேயும், சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்த அமைச்சுப் பதவிகள் அந்தக் கட்சிக்குள் மாற்றமடையும் எனவும் பிரதான இரண்டு கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கமைய அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் முழுமையான கண்காணிப்பின் கீழ் இந்த அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளது.

இந்த முறை இளம் அமைச்சர்கள் பலருக்கு முக்கிய அமைச்சுப் பதவிகள் கிடைப்பதற்கும், சிரேஷ்ட அமைச்சர்களுக்குப் பதவி இல்லாமல் போவதற்கும் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன என அவர் மேலும் கூறினார். (ஐ)

**டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி**

பிளாஸ்ரிக் உற்பத்தி, பிளாஸ்ரிக் திருத்த வேலை, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.

**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பாவம் சுமந்திரன்!

சில பேருக்கு நாக்கில் சனி என்று நம்மிடையே கூறுவதுண்டு. அவர்கள் எதைச் சொல்லப் போனாலும் அது ஏடாகூடமாய்ப் போய் முடியும்.

அந்த நிலைமைதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுமந்திரனுக்கு. சில சமயங்களில், தன் வாயல் கெடும் நுணல் போல அதிகப் பிரசங்கித்தனமாகக் கருத்துக்களைக் கூறப் போய் அவர் அதற்காக கடும் விமர்சனங்களை வாங்கிக் கட்டுவதுண்டு, இப்போதெல்லாம் அது சர்வசாதாரணமாகி வருகின்றது.

அவர் எதைக் கூறினாலும் அதற்கு ஓர் அர்த்தம் கற்பித்து, அவரை வாங்கு வாங்கு என்று வாங்கித் தள்ளி விடுவார்கள் - குறிப்பாக முகநூல்கள் உட்பட்ட சமூக வலைத்தளங்களில்.

ஆனால், அதற்காக சுமந்திரன் அசைந்து கொடுக்கமாட்டார். தான் கூறிய கருத்தில் - விடயத்தில் - உறுதியாக நின்று, அதை நியாயப்படுத்தி, தனது கருத்தை மேலும் மேலும் வலுப்படுத்துவார். அதில் அவர் வல்லவர்.

'செல்லும் செல்லாதவைக்கு எல்லாம் செட்டியார்கள் பொறுப்பு' - என்ற மாதிரி இப்போது உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பு அடைந்த பின்னடைவுக்கும் அவர் மீதே பலரும் குற்றம் சுமத்தி நிற்கின்றனர். அவரோடு - பக்கத்தில் - நின்ற பலர் கூட, இப்போது பின்னடைவுக்குத் தாம் பொறுப்பேற்காமல், மெல்ல சுமந்திரனின் அணுகுமுறை மீது தவறைச் சுமத்தி விட்டு, தாங்கள் நழுவப் பார்க்கின்றார்கள். அதுவும் சுமந்திரனுக்குத் தெரியும். அதற்காகவும் அவர் கவலைப்படுவதில்லை.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வரும் சமரச முயற்சி - தீர்வு எத்தனம் - பின்னடைவு கண்டால், அல்லது தோல்வியில் முடிவடைந்தால், அதற்கான பொறுப்பை சம்பந்தனோடு சேர்ந்து சுமக்கப் போகின்றவர் சுமந்திரன் மட்டுமே. பக்கத்தில் நிற்கும் மாவை சேனாதிராசாவும், மற்றைய கூட்டுக் கட்சிகளின் தலைவர்களும் கூட அதற்குப் பொறுப்பேற்க மாட்டார்கள் என்பதை இப்போதே அடித்துக் கூறிவிடலாம். அதில் சந்தேகப்பட எதுவும் இல்லை. ஏனென்றால் அப்படி அந்த முயற்சி தோற்றால், அதற்கான பொறுப்பு தங்கள் மீது வந்துவிடக் கூடாது என்பதை முற்கூட்டியே உறுதிப்படுத்தும் விதத்தில்தான் அவர்கள் எல்லோரும் இப்போதுவரை செயற்பட்டு வருகின்றார்கள்; கருத்து வெளியிட்டுவருகின்றார்கள்.

ஆக, சுமந்திரன் மட்டுமே முயற்சி தோற்றால் அதற்கு நானே பொறுப்பேற்பேன் - தனித்துப் பொறுப்பேற்பேன் - என்று இப்போதே துணிச்சலுடன் கோடி காட்டி வருகின்றார்.

இப்போது அவர் புதிய ஒரு சிக்கலில் மாட்டியிருக்கின்றார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய ஊழல் மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கை மீதான விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளையில் திட்டமிட்டபடி எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால், அந்த ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகளின் பிரதிகள் தமிழில் இதுவரை சமர்ப்பிக்கப்படாமையால் அந்த விவாதத்தை நடத்த முடியாது என்று ஒற்றைக் காலில் நின்றார் சுமந்திரன்.

"எமக்குத் தெரியாத - புரியாத - மொழிகளில் நீங்கள் அறிக்கைகளை வைத்துக் கொண்டு அவற்றின் மீது விவாதம் நடத்தினால் நாங்கள் எப்படி அந்த விவாதத்தில் கலந்து கொள்வது? இது, எங்களின் அடிப்படை உரிமையை - மொழி உரிமையை - மீறும் நடவடிக்கை. இதற்கு இணங்கவே முடியாது" - என அவர் அடித்துக் கூறினார்.

கூட்டு எதிரணியின் வாசுதேவ நாணயக்கார உட்பட பலர், தமிழில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமலேயே விவாதத்தை நடத்தலாம் என்று வாதிட்ட போதிலும், சுமந்திரனின் கடும் - விடாப்பிடியான - நிலைப்பாடு காரணமாக வேறுவழியின்றி, அந்த விவாதத்தை நாள் குறிப்பிடாமல் தள்ளிப்போட்டார் சபாநாயகர்.

தமிழில் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையைச் சாட்டி, நாட்டை ஒரு கலக்குக் கலக்கக்கூடிய விவகாரம் மீதான விவாதத்தையே சுமந்திரன் தள்ளிப் போடவைத்திருக்கின்றார் என்பதற்காக அவரைத் தமிழர் தப்புகள் பாராட்டும் என்று பார்த்தால், கதை வேறு விதமாகத் திரும்பியுள்ளது.

மேற்படி ஆணைக்குழு அறிக்கை ஒன்று எட்டாயிரம் பக்கத்தில் உள்ளது. அந்த எட்டாயிரம் பக்கங்களும் தமிழக்கு மொழி பெயர்க்கப்பட்டு, அவற்றின் பிரதிகள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர்தான் விவாதம் என்றால், அதற்கு மாதங்கள் பல கடந்து விடும்.

விவாதப் பொருள் பிணை முறி விற்பனை முறைகேடு மற்றும் ஊழல் சம்பந்தப்பட்டது. சிக்கியுள்ளதோ நல்லாட்சி அரசில் பிரதமர் ரணிலின் பக்கத்தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பு.

தமிழ் மொழியில் அறிக்கைப் பிரதிகள் இல்லை என்பதை வைத்து, ரணில் தரப்புக்கு பெரும் நெருக்கடியைக் கொண்டு வரக்கூடிய நாடாளுமன்ற விவாதத்தை காலவரையறையின்றித் தள்ளிப் போடப் பண்ணிவிட்டார் சுமந்திரன் என்று இப்போது தமிழர் பக்கத்தில் இருந்து விமர்சனங்கள் பறக்கத் தொடங்கியுள்ளன.

பாவம் சுமந்திரன். எந்தப் பக்கம் பேசினாலும் அவருக்கு சொல்லடிதான் போலும்.

# சுயேச்சைக்குழு வேட்பாளர் எண்மருக்கு சுழற்சிமுறையில் பதவி வகிக்க வாய்ப்பு

## காரைதீவு சுயேச்சைக்குழுவின் முன்மாதிரிக்கு வரவேற்பு!

காரைதீவு, பெப். 22

காரைதீவு சுயேச்சைக்குழு தமது வேட்பாளர்களுள் விரும்பிய எட்டுப் பேருக்குத் தமக்குக் கிடைத்த இரண்டு ஆசனங்களையும் சுழற்சி முறையில் பகிர்ந்தளிக்க முன்வந்துள்ளது. பிரதி வருடமும் இரண்டு உறுப்பினர்கள் வீதம் எண்மருக்கும் அந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என சுயேச்சைக் குழுத் தலைவர் சந்திரசேகரம் நந்தகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலுக்கு முன்பு மகா சபை கூட்டிய கூட்டத்தில் எமது காரைதீவு தமிழ் மக்களின் இருப்பு, மானம் காப்பாற்றும் வகையில் செயற்படுவதென்றும் எமக்குக் கிடைக்கின்ற ஆசனங்களை எம்மிடையே சுழற்சிமுறையில் அனைவரும் பகிர்ந்து சபையை அலங்கரிப்பது என்றும் தீர்மானமெடுத்திருந்தோம். அதனை மேடைகளிலும் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தோம்.

அதற்கமைய நேற்றுமுன்தினம் காரைதீவின் பொதுமக்களின் மகாசபை வழிநடத்தல் குழுவின் முன்னிலையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. சுயேச்சை அணித்தலைவர் ச.நந்தகுமார் தலைமையிலான வேட்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் வேட்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு தமது விருப்புக்களைத் தெரிவித்ததன் அடிப்படையில் எண் மருக்கு சுழற்சி முறையில் இப்பதவியை வழங்குவதென்று ஏகமனதாக சந்தோசமான தீர்மானமாகியது-என்றார்.

தலைவர் ச.நந்தகுமார், சி.நந்தேஸ்வரன், மா.புஸ்பநாதன் உள்ளிட்ட அறுவர் தாமாகவே சபைக்குச்செல்வதில்லையென்றும் எக்காரணம் கொண்டும் சபைப் பொறுப்பை எடுப்பதில்லை என்றும் பெருந்தன்மையுடன் கூறியதற்கமைவாக ஏனைய 8 பேருக்கும் 4வருடத்தினுள் சுழற்சிமுறையில் அந்த 2 உறுப்பினர் பதவியை வழங்குவதென்று தீர்மானமாகியமை பலரதும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

(ஐ)

# காணாமற்போனோரைத் தேடி 351 ஆவது நாளாகப் போராட்டம்



முல்லைத்தீவு, பெப். 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளைக் கடந்த வருடம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாகக் கூடாரமமைத்து ஆரம்பித்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 351 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

கடந்த காலத்தில் கடத்தப்பட்டு, இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமது பிள்ளைகளுக்கு முடிவு கிடைக்கும் வரை போராட்டம் தொடருமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அரசு தமக்கு எந்தத் தீர்வையும் தராது என்பதை 3 தடவைகளாகத் தம்மைச் சந்தித்த ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ள நிலையில், சர்வதேச விசாரணையே தமக்கான தீர்வாக அமையும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

(ஐ)

# ஜனாதிபதியின் பணிப்புக்கமைய அம்பாள்புரத்துக்கு பஸ் சேவை

முல்லைத்தீவு, பெப். 22

ஜனாதிபதியின் பணிப்புக்கமைய அம்பாள்புரம் மாணவர்களுக்கு நேற்று முதல் பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அம்பாள் புரம் பகுதி மாணவர்களின் நன்மை கருதி, ஜனாதிபதியின் பணிப்புக்கமைய நேற்று முதல் பஸ்சேவை ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

கடந்த காலங்களில் குறித்த பகுதியில் பஸ் சேவை இல்லாததன் காரணமாக மாணவர்கள் பல கிலோமீற்றர் தூரம் நடந்து பாடசாலை சென்று வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது

குறித்த பகுதியூடாக அதிகளவான பஸ் சேவைகள் இடம்பெற்றிருந்தபோதும், வன்னிவிளாங்குளம் சந்தியிலிருந்து அம்பாள்புரம் ஊடாக மல்லாவி செல்லும் வீதி பாதிக்கப்பட்டதன் காரணமாக இந்தப் பகுதியால் சென்ற அனைத்து பஸ்களும், மல்லாவியிலிருந்து வடகாடு ஊடாக பயணிக்கத் தொடங்கின. இதனால் கொல்லவிளாங்குளம், அம்பாள்புரம் உள்ளிட்ட கிராம மக்கள் போக்குவரத்தை இழந்து, பாடசாலை மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டு நடந்து பாடசாலைக்குச் சென்றுவரவேண்டிய நிலை ஏற்பட்டது.

இது தொடர்பில் பலதடவைகள் மாந்தைகிழக்கு பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டங்களில் கலந்துரையாடி குறித்த வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்குமாறும், இந்த வீதி ஊடான போக்குவரத்துக்கு வழி வகுக்குமாறு கூறியும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததன் விளைவாக குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்றதன் அடிப்படை யில், ஜனாதிபதியால் உடனடியாக குறித்த மாணவர்களுக்கு போக்கு வரத்து வசதியை ஏற்படுத்துமாறு பணிக்கப்பட்டதற்கு அமைவாக நேற்று முதல் அந்த மாணவர்களின் போக்குவரத்துக்கு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் முல்லைத்தீவு சாலைக்குச் சொந்தமான அரச பஸ் ஒன்று மன்னாரில் இருந்து காலை பயணத்தை ஆரம்பித்து 6.40 மணிக்கு அம்பாள்புரம் வருகைதந்து மாணவர்களை ஏற்றிப் பாடசாலையில் இறக்கி முல்லைத்தீவு வரும் எனவும், மீண்டும் நண்பகல் 12 மணிக்கு முல்லைத்தீவில் தனது பயணத்தை ஆரம்பித்து, பிற்பகல் 1.30 மணிக்கு வன்னிவிளாங் குளம் பாடசாலைக்குச் சென்று அங்கிருந்து மாணவர்களைஏற்றி அம்பாள்புரம் பயணிக்கும் எனவும், இந்தச் சேவையை மாணவர்களும், மக்களும் பயன்படுத்திக்கொள்ள முடியுமெனவும், இலங்கைப் போக்குவரத்து சபை முல்லைத் தீவு சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

(ஐ)

## நாளை

23.02.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : கார்த்திகை மு.ப 10.32 வரை
திதி : அட்டமி மு.இ 10.13 வரை
சுபநேரம் : 6.30 – 8.00 வரை
இராகுகாலம்: 11.00 – 12.30 வரை

# டக்ளஸுக்கு அமைச்சுப் பதவி; தடுக்கவேயில்லை கூட்டமைப்பு

## மாவை எம்.பி. தெரிவிப்பு

எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், பெப்.22

மைத்திரி – ரணில் கூட்டு அரசில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி கொடுப்பதை நாங்கள் தடுக்கவில்லை. அவருக்கு அமைச்சுப் பதவி தேவை என்றால் அல்லது அரசு அமைச்சுப் பதவியை அவருக்கு கொடுக்க விரும்பினால் கொடுக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியும். அமைச்சராக இருந்து அவர் செய்யாததை நாங்கள் வெளியில் இருந்தே செய்துள்ளோம். அவரது அமைச்சுப் பதவிகளைக் கண்டு நாங்கள் அச்சம் கொள்ளவில்லை எனத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மத்திய அரசில் அமைச்சுப் பதவி பெறுவதற்கு கூட்டமைப்பே தடையாக இருந்ததாகக் கூறப்படுகின்ற நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் கூட்டமைப்பு ஆட்சியமைக்கும் உள்ளூராட்சிச் சபைகளில் கூட்டமைப்புக்கு டக்ளஸ் ஆதரவை வழங்கினால் மத்தியில் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கு கூட்டமைப்பும் இணக்கம் தெரிவிக்குமெனவும் செய்திகள் வெளியாகியிருந்தன

இது தொடர்பாக மாவை சேனாதிராசாவிடம் கேள்வியெழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மைத்திரி -ரணில் கூட்டு அரசில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவியை வழங்குவது தொடர்பாக அரசசே தீர்மானிக்க வேண்டும். இந்த அரசு அமைக்கப்பட்டபோது எங்களுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்குவதாகவும் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டிருந்தார்கள். நாங்கள் இன விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்ற கட்சி என்பதால் அமைச்சரவையில் சேரப் போவதில்லை எனத் தீர்மானித்துள்ளதைச் சொல்லியிருக்கின்றோம்.

அவ்வாறு எங்களது கேட்பாட்டுக் கொள்கை என்பதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நாங்கள் அமைச் சரவையில் சேர்வதற்கு டக்ளஸ் தடையாக இருக்கிறார் என்றோ அவர் அமைச்சரவையில் சேர்வதற்கு நாங்கள் தடையாக இருக்கிறோம் என்றோ கூறுவது ஒரு கட்டுக்கதைதான். அதை விட்டுவிட்டு அரசுக்குத் தேவை யானால் அல்லது அவருக்குத் தேவையானால் அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனெனில் ஒவ்வொரு காலத்திலும் அவர் அமைச்சராகவே இருந்து வந்திருக்கிறார். அதற்காக டக்ளஸ் தேவானந்தாவிற்கு அமைச்சுப் பதவி கொடுப்பதைத் தடுக்க வேண்டுமென்றோ அல்லது அவர் அமைச்சராவது எமக்கு அச்சமென்றோ அல்ல. அவ்வாறான சூழல் எங்களுக்கு ஒருபோதும் இருந்ததில்லை.

எங்கள் மக்கள் தந்த ஆணையின் அடிப்படையிலே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். இன்றுள்ள கூட்டு அரசுக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினையில் எங்கள் இனம், எங்கள் எதிர்காலம் பாதிக்கப்படுமென்றே தாம் யோசிக்கின்றோமே தவிர நாங்கள் மாகாண சபை எப்படி இருக்கவேண்டுமென்றோ அல்லது உள்ளூராட்சி மன்றங்கள் யார் யாரிடம் இருக்க வேண்டுமென்றோ கவனம் செலுத்தவில்லை.

நாங்கள் ஓர் இலக்கை அடைவதற்காக– அதாவது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக வெளியில் இருந்து ஆதரித்து வருகிறோம். அது தான் உண்மையானது. அதனை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். இனப்பிரச்சனைக்குத் தீர்வைக் காண்பதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது என்பதைச் சிங்கள மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் சொல்கின்ற கடப்பாடு எங்களுக்கும் இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வ ஏற்றுக் கொள்ளக் கூடியதாக வந்தால் அதற்கு 3 இல் 2 பெரும்பான்மை வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செயற்படுகின்றோம். அவ்வாறான தீர்வைப்பற்றித்தான் யோசிக்கிறோமே தவிர நாங்கள் அமைச்சுப்பதவிகளைப் பெற போட்டியிடவில்லை. என்றார். (உ)

# ஈ.பி.டி.பியுடன் பேசவேயில்லை

## கூறுகிறார் மாவை எம்.பி.

எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், பெப்.22

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடனோ அல்லது தேசியக் கட்சிகளுடனோ எந்தவித பேச்சுக்களையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ள தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈ.பி.டி.பியுடன் பேசியதாகக் கூறப்படுவதும் முழுப் பொய் என்றும் குறிப்பிட்டார்.

யாழ் மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்குக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக வெளியாகிய செய்திகள் குறித்து கேட்ட போதே மாவை சேனாதிராசா மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி சபைகளில் ஆதரவை வழங்குமாறு நாங்கள் ஈபிடிபியுடன் பேசியதாகக் கூறப்படுவது முழுப் பொய். உள்ளூராட்சி மன்றங்கள் சம்பந்தமாக வந்த செய்திகளின் அடிப்படையில் அவர்களுடன் பேசுவது குறித்த எந்த எண்ணத்தையும் நாங்கள் கொண்டிருக்கவில்லை. தேசியகட்சிகளது ஆதர வைக் கூட நாங்கள் கோரவில்லை. அவ்வாறு கோருவதில் நியாயமும் இருக்கவில்லை என்றார். (ஐ-7)

# ஆள்சேர்ப்பு நேர்முகத் தேர்வை ஒத்திவைக்குமாறு கோரிக்கை

## யாழ். பல்கலை ஊழியர் தொழிற் சங்கம் விடுத்துள்ளது

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள ஆள்சேர்ப்பு நேர்முகத் தேர்வை ஒத்தி வைக்குமாறு ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊழியர்சங்க பொதுக் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது எமது கோரிக்கைக்கு அமைவாக நேர்முகத் தேர்வானது ஒத்திவைக்கப்படாமல் நடத்தப்படுமானால் அதற்கு எதிராகத் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்வதுஎன்று முடிவெடுக்கப்பட்டது.

நேற்று மாலை வரை யாழ். பல்கலை நிர்வாகத்தினால் எந்தவித சாதகமான பதிலும் வழங்கப்படவில்லை. மாறாக எமது கோரிக்கைகளைப் புறந்தள்ளி நேர்முகத்தேர்வுகளை நடத்துவதற்கு யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் முனைப்புக் காட்டும் நிலையே காணப்பட்டது.

இது குறித்து தொழிற்சங்கம் தெரிவிக்கையில் அத்துடன் ஊழியர் சங்க பிரமுகர் ஒருவருக்கு நேற்று முன்தினம் இரவு நேர்முகத் தேர்வைக் குழப்புவது நீதானா? என்று தொலைபேசி வழி அநாமதேய மிரட்டலும் விடுக்கப்பட்டுள்ளது என்றுள்ளது.

# வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் விரைவுபடுத்துவது அவசியம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.22

வடமாகாணத்தில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தை அமுல்படுத்துவது தொடர்பான வடமாகாணக் கல்வியமைச்சின் செயற்பாடுகள் திருப்தியளிப்பதாக அமையவில்லை என்றும், அதனை விரைந்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் இலங்கை ஆசிரியர் சங்கம் வடமாகாணக் கல்வியமைச்சர் மற்றும் வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2018 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட வேண்டிய ஆசிரியர் வருடாந்த இடமாற்றச் செயற்பாடானது மிகவும் மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலைக் காரணம் காட்டி இடமாற்றம் பிற்போடப்பட்டிருந்தது. ஆயினும் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னரும் கூட இடமாற்றம் பெறத்தகுதியானவர்கள் தொடர்பான பெயர்ப்பட்டியல் கூட வெளியிடாமல், இடமாற்றச் சபையின் அங்கீகாரம் இது வரை பெறப்படாமல் வடமாகாணக் கல்வியமைச்சு செயற்படுவது வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் மட்டில் பெரும் மன உழைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பல்வேறு இழுத்தடிப்புக்களுக்கு மத்தியிலேயே ஆசிரியர் இடமாற்றங்கள் நடைபெற்றுவந்திருக்கின்றன. ஆசிரியர்களின் நலன்கள் தொடர்பாக வடமாகாணக் கல்வியமைச்சு தொடர்ச்சியாக இதே விதமான அசமந்தப்போக்குகளையே கடைப்பிடித்துவருவது கண்டனத்துக்குரியது.

இடமாற்றம் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு தமது மேன்முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். அவர்களுள் தகுதியானவர்களுக்கும் உரிமை பாதிக்கப்படாது பாதுகாக்கவேண்டும். இடமாற்றம் தொடர்பான இவ்வித இழுத்தடிப்புக்கள், மேன்முறையீடு செய்வதற்கான ஆசிரியர்களின் சந்தர்ப்பத்தை இழுத்தடிப்பதற்கான செயற்பாடாக வடமாகாணக் கல்வியமைச்சினால் மேற் கொள்ளப்படுகின்றதோ என்னும் நியாயமான சந்தேகம் ஆசிரியர்கள் மட்டில் எழுந்துள்ளதை தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

எனவே 2018 ல் இடமாற்றம் பெறத் தகுதியான ஆசிரியர்களின் விவரங்கள் உடனடியாக வெளியிடப்பட்டு மேன் முறையீடுகளும் பரிசீலிக்கப்பட்டு முறையாக இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். என்றுள்ளது.

# நாளை சுற்றுலா

கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியவர்கள் ஆன்மிகச் சுற்றுலாவாக திருக்கேதீஸ்வரம் மற்றும் மடு தேவாலயத்துக்கு நாளை வெள்ளிக்கிழமை அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இவர்களுடன் இந்த முறை பூநகரி, ஊர்காவற்றுறை பிரதேசங்களைச் சேர்ந்த மூத்தோர்களும் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.



தவக்கால சிந்தனை

# இறையோடு உடனிருத்தல்

**'மேலும் சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னுடன் இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன். உம் கோலும் கழியும் என்னைத் தேற்றும்' – தி.பா. 23:4**

சாவின் நிழற் பள்ளதாக்கு பலஸ்தீன நாட்டில் அமைந்துள்ளது. இது ஜெருசலேமில் ஆரம்பித்து செங்கடலில் முடிவடைகின்றது. மிகவும் அபாயகரமான, கரடு முரடான, குறுகலான பாதை இது. சிறிது தவறினாலும் மரணமே! அத்தகைய ஆபத்தான பாதையில் ஆடு பயணித்தாலும் அது அச்சமுறாது. காரணம் ஆயன் தன்னுடன் இருக்கிறான் என்பதேயாகும்.

இலகுவில் வனவிலங்குகளுக்கு இரையாகக் கூடிய செம்மறி ஆடுகளை வனவிலங்குகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக ஆயன் 3 அடி நீளமான கோலினையும் 9அடி நீளமான கைத்தடியினையும் (கொழுக்கியுடன் வளைந்து காணப்படும் தடி) கொண்டு செல்வது வழக்கம். தாவீத அரசர் இவற்றின் உதவியுடன் சிங்கத்தையும் கரடியையும் கொன்று தன் மந்தையை காப்பாற்றினார். (1 சாமுவேல் 17). அவ்வாறு அனுபவத்தின் மூலம் பெற்ற அறிவைப் பயன்படுத்தி, ஆண்டவர் தமது மக்களைக் காப்பாற்றுவதில் விழிப்பாயிருக்கிறார். என்பதைத் திருப்பாடல் ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார். மேலும் செங்குத்தான மலைச் சரிவில் ஆடு விழுந்து விட்டால் ஆயன் கைத்தடியின் உதவியுடன் ஆட்டைக் காப்பாற்றுவார்.

இவ்வாறே உலகப் போக்கில் எம்மை இழந்து விடாதிருக்க இறைவன் உடனிருந்த வழி நடத்துகின்றார். ஆபத்தான வேளைகளிலெல்லாம் அருகிருந்து அவர் பாதுகாக்கின்றார். அவர் வழியில் நாம் வாழ, அவர் மொழியே நாம் பேச, அவர் பேச்சே நாம் கேட்க, அவர் இதயத்தில் நாம் இருக்கத் தொடருவோம் புதுவாழ்வுப் பயணமதை.

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அ.ம.தி

# கிழக்கில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாக மாறிவிடும்



**பிரசாந்தன் தெரிவிப்பு**

மட்டக்களப்பு,பெப்.22

கடந்த காலங்களில் விட்ட தவறுகளை இனியும் ஏனைய தமிழ்க்கட்சிகள்விடுமாகஇருந்தால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாக மாறிவிடும் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

மண்முனைப்பற்றுப் பிரதேச உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் காலை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

தலைவர்களுக்காகவோ அல்லது அரசியல் கட்சிகளுக்காகவோ மக்களல்ல. மக்களுக்காகவே அரசியல் கட்சிகளும் தலைவர்களும் செயற்படவேண்டும். அப்பொழுதுதான் உண்மையான சமுதாய கட்டமைப்பை வளர்த்துக் கொண்டு தமிழர்களின் இருப்பைப் பேணிப் பாதுகாக்க முடியும்.

கடந்த காலங்களில் விட்ட தவறுகளை இனியும் ஏனைய தமிழ்க்கட்சிகள்விடுமாகஇருந்தால் கிழக்குமாகாணத்தில்தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாக மாறி விடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சர்வதேச மற்றும் தேசிய கொள்கைகளைக் கூறிக்கொண்டும், ஏனைய விடயங்களைப் பேசிக் கொண்டும் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் ஆட்சியமைக்க வேண்டிய சபைகளை கோட்டை விடுகின்ற நிலைமைக்குத்தள்ளப் பட்டு விடக்கூடாது என்பதில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தெளிவாக இருக்கின்றது.

அனைவரும் இதயசுத்தியுடன் மக்களுக்காகப் பேசுவதற்கு முன்வர வேண்டும். அப்போது தான், தமிழ்ப் பிரதேசங்களை பாதுகாத்துக் கொள்ளமுடியும் எனத் தெரிவித்துள்ளார்.

# நெத்தலிக் கருவாட்டுக்கு மட்டுவில் கிராக்கி




மட்டக்களப்பு மாவட்டத்தில் வறட்சியான வானிலை நீடிப்பதையடுத்து, நெத்தலிக் கருவாடு உற்பத்தியில் பெரும் எண்ணிக்கையிலான மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போதைய வானிலை காரணமாக தினமும்அதிகளவிலான நெத்தலி மீன்கள் பிடிபடுவதால் அவற்றைக் கருவாடாக மாற்றி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்நடவடிக்கைகளில் உள்ளூர்வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நாவலடி, வாகரை, ஏத்துக்கால், பூநொச்சிமுனை, களுவாதளை உட்படபலகரையோரப் பிரதேசங்களில் குறித்த நெத்தலிக் கருவாடு உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது சந்தையில் ஒரு கிலோகிராம் நெத்தலி ஆயிரம் ரூபாய் முதல் ஆயிரத்து 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உதய தேவி மீண்டும் ஆரம்பம்



மட்டக்களப்பு,பெப்.22

மட்டக்களப்பு - கொழும்புக்கிடையில் கடந்த 12 நாள்கள் இடைநிறுத்தப்பட்டிருந்த உதய தேவி ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மட்டக்களப்பு ரயில் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

உதய தேவி ரயில் சேவை, தினமும் காலை 6.10 மணிக்கு மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு, பிற்பகல் 3.15 மணியளவில் கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

அதேபோன்று தினமும் காலை 6.05 மணிக்கு கொழும்பு, கோட்டையிலிருந்து புறப்பட்டு, பிற்பகல் 2.45 மணிக்கு மட்டக்களப்பை வந்தடையும்.

உதய தேவி ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்ததால், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொதுமக்கள், அரச அதிகாரிகள் பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 15 சமாதான நீதிவான்கள் சத்தியப்பிரமாணம்

மட்டக்களப்பு, பெப்.22

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 15 பேர் சமாதான நீதிவான்களாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரனின் சிபாரிசுக்கு அமைவாக நீதி அமைச்சால் இந்தச் சமாதான நீதிவான்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சமூகத்தில் உள்ள சிறந்த சமூக சேவையாளர்களை இனங்கண்டு அவர்களை கௌரவிக்கும் வகையில் இவ்வாறான சமாதான நீதிவான்கள் நியமனங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

இதன் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட 15பேர் இதன்போது மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

# கஞ்சா கலந்த சுருட்டுகளை விற்றவர் விளக்கமறியலில்

திருகோணமலை தலைமையகப்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கஞ்சா கலந்த சுருட்டுகளைவிற்பனை செய்து வந்த நபரொருவரை, விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க உத்தரவிட்டார்.

திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர், மீன்வாடியிலும் திருகோணமலை நகரிலும், கஞ்சா கலந்த சுருட்டுகளை மறைத்து விற்பனை செய்து வருகிறாரென, திருகோணமலைக் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், திருகோணமலை நகரில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட வேளையில், கஞ்சா கலந்த 12 சுருட்டுகளை அவர் வைத்திருந்தாரென, பொலிஸார் தெரிவித்துள்ளனர்

# மாடுகளைக் கடத்திய மூவர் கைது!

மட்டக்களப்பு,பெப்.22

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி 5 எருமை மாடுகள் உட்பட 10 மாடுகளைக் கடத்திச்சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிசிர பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்ட இவர்கள், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது ஒருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் மூவருக்கும் முப்பதாயிரம் ரூபாவை நீதிபதி எம்.கணேசராஜா அபராதமாக விதித்தார்.

குறித்த மாடுகள் திருடப்பட்ட மாடுகளா என்பது தொடர் பான பூரண விசாரணையின் பின்னர் எதிர்வரும்26ஆம்திகதி மாடுகள் ஒப்படைக்கப்படுமென, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# ஏறாவூர் நகர சபைக்காக சுழற்சி முறையில் சு.க. உறுப்பினர்கள்

ஏறாவூர்,பெப்.22

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஏறாவூர் நகர சபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெற்றுக் கொண்ட இரண்டு ஆசனங்களுக்குமான உறுப்பினர்களை, சுழற்சி முறையில் நியமனம் செய்ய ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என, அக்கட்சியின் ஏறாவூர் மத்திய குழு தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம், ஏறாவூர் நகர சபையில் கிடைக்கப் பெற்றுள்ள இரண்டு பட்டியல் ஆசனங்களையும், குறித்த உறுப்பினர்கள் மத்தியில் சுழற்சி முறையில் வழங்கப்படவுள்ளது.

அதில் முதலாவது ஆசனத்தை, தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிய வேட்பாளர்கள் மத்தியில்,வட்டாரரீதியாகப்பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை ஒழுங்கின் அடிப்படையில் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது ஆசனத்தை, பட்டியல் நியமனத்துக்காக ஏற்கெனவே வேட்புமனுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டவர்களுக்கு, சுழற்சி முறையாக வழங்குவது எனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக, கட்சி உயர் மட்டத்துக்குக் கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகளை, மாவட்ட அமைப்பாளர் சுபைர் ஊடாக, இராஜாங்க அமைச்சர்ஹிஸ்புல்லாஹ்வின்ஆலோசனையின் பிரகாரம் மேற்கொண்டு வருகிறோம் என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஏறாவூர் மத்திய குழுவின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


ஏறாவூர் நகர சபைக்காக கைச் சின்னத்தில், முன்னாள் மாகாண அமைச்சர் சுபைர் தலைமையில் களமிறங்கிய சுதந்திரக் கட்சி அணி, வட்டார ரீதியாக ஓர் ஆசனத்தை வெற்றி கொண்டதுடன், பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் பிரகாரம், விகிதாசார அடிப்படையில்,இரண்டு ஆசனங்களுமாக 3 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்ச்சைக்குரிய பிரிகேடியர் பிரியங்க லண்டனில் இருந்து மீள அழைப்பு

பிரித்தானியாவில் உள்ள இலங்கை தூதுவர் அலுவலகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகச்செயற்பட்ட பிரிகேடியர் பிரியங்க இலங்கை அரசாங்கம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு அமைய நாடு திரும்பவுள்ளார்.

இலங்கையின் சுதந்திரதினத்தன்று பிரித்தானிய தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களின் கழுத்தை அறுத்து விடுவேன் என சமிக்ஞை காட்டியமையினால் பெரிய சர்ச்சைகளுக்கு அவர் முகம் கொடுக்க நேரிட்டது.

அன்றைய தினம் அவரது சேவை உடனடியாகஇடைநீக்கம்செய்யப்பட்ட போதிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனைத் தடுத்தார். அந்த இராணுவ அதிகாரி மரண அச்சுறுத்தல் விடுத்தார் என பிரித்தானிய நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஜோன் ரயன், சிமோன் மெக்டெனோ மற்றும் போல் ஸ்கலி ஆகியோர் குற்றஞ் சுமத்தினர்.



எனினும் அந்த இராணுவ அதிகாரி தவறு ஒன்றையும் செய்யவில்லை என இராணுவத் தளபதி லெப்டினன்ட். ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க தெரிவித்திருந்தார். இந்தச் சம்பவம் ஓரளவு மூடி மறைக்கப்பட்ட நிலையில் கடந்த வாரம் மீண்டும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக பிரித்தானிய தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது பிரித்தானியா பொதுநலவாய சபை அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழர்களின் எதிர்ப்பின் பின்னர் பிரிகேடியர் பிரியங்க இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் மீள அழைக்கப்பட்டமைக்கான காரணம் மர்மமாகவே உள்ளது.

# சாட்சிக் கூண்டில் நிற்க முடியாது தடுமாறிய விமலுக்குக் கதிரை



காலாவதியான கடவுச் சீட்டில் வெளிநாடு செல்ல முயற்சித்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக வழக்கு விசாரணை இடம் பெற்று வருகிறது. குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு, 2 நாள்களுக்கு முன்னர் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது.

இந்த வழக்கின்போது விமல் வீரவன்ஸ சாட்சிக் கூண்டில் நிற்கத் தடுமாறியுள்ளார். இதனால் வழக்கு விசாரணை நிறைவடையும் வரை நாற்காலியில் அமர்ந்திருப்பதற்கு சட்டத்தரணிகளின் ஊடாக அனுமதி கோரப்பட்டுள்ளது. அதற்கமைய அங்கு அமர்ந்திருந்து சாட்சியளிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. சாட்சியாளர் கூண்டில் விமல் வீரவன்ஸவுக்கு அமர்ந்திருப்பதற்கு நாற்காலி ஒன்று வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (உ)

# ஊழல், மோசடிக்காரர்களை தவிசாளர்களாக்காதீர்கள்!

## மார்ச் 12 அமைப்பு வலியுறுத்தல்

ஊழல் மற்றும் மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களின் தலைமைத்துவத்தை வழங்க வேண்டாம் என்று மார்ச் 12 அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

மார்ச் 12 அமைப்பின் சார்பில் கொழும்பு, மருதானை சமூக மற்றும்சமாதானத்துக்கான மத்திய நிலையத்தின் அரங்கத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பொன்று நடைபெற்றது.

நடைபெற்று முடிந்த தேர்தலின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் செயற்பட வேண்டிய விதம் குறித்து சிவில் அமைப்புகளின் எதிர்பார்ப்புகளை தெளிவுபடுத்தும் வகையில் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றிருந்தது.

மார்ச் 12 அமைப்பின் ஏற்பாட்டில் நடந்த இந்தச் செய்தியாளர்சந்திப்பில் அதன் இணைத் தலைவர்களில் ஒருவரான ரோஹண ஹெட்டியாராய்ச்சி கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்உள்ளூராட்சி மன்றங்களை வெளிப்படைத் தன்மையுடனும், திறமையாகவும் வழிநடத்திச் செல்ல ஊழல் மற்றும் மோசடிகளுடன்தொடர்பில்லாதவர்கள் தலைமைத் துவத்துக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி பொருத்தமானவர்களை உள்ளூராட்சி மன்றங்களின் தலைமைத்துவப் பதவிக்கு நியமிக்கவேண்டும்.- என்றும் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தொடர்ந்தும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# 150 புலிகளுக்கு எதிரான சர்வதேச பிடியாணைகளை கூட்டமைப்பின் அழுத்தத்தால் விலக்கியதாம் அரசு

விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிரான சர்வதேசசிவப்பு அறிக்கையுடனான 150 பிடியாணைகள் நல்லாட்சி அரசாங்கத்தினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளன எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார்.

கடந்த 04ஆம் திகதி டுபாயில் உதயங்க வீரதுங்கவை சர்வதேச சிவப்பு அறிக்கை பிடியாணை அடிப்படையில் கைதுசெய்து இலங்கை கொண்டு வர அரசாங்கம் முயற்சி செய்தது. 2006ஆம் ஆண்டு உக்ரேன் அரசாங்கத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 'மிக்' விமானக் கொள்வனவில் ஊழல்கள் நடைபெற்றுள்ளன எனவும், அந்த ஊழல் மோசடிகளில் உதயங்க வீரதுங்கவுக்கு நேரடித் தொடர்பு இருக்கின்றது எனவும் பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கின் அடிப்படையில் அவரைத் டுபாயில் வைத்துக் கைதுசெய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அவருக்கு எதிராக சர்வதேச 'இன்டர்போல்' பொலிஸாரின் சிவப்பு அறிக்கை எனப்படும் ரெட் நோட்டீஸ் வெளயிடப்பட்டிருக்க வில்லை என்று டுபாய் பொலிஸார் கை விரித்து விட்டனர்.

எனினும், தற்போது அவருக்கு எதிராக சிவப்பு அறிக்கையொன்றை பெற்றுக் கொள்ள நிதிமோசடிப் பிரிவு பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.



தனக்கு எதிராக மட்டுமே அந்த முயற்சி என்கிறார் மஹிந்தவின் மைத்துனர்

இதற்கிடையே நாட்டுக்காக அர்ப் பணிப்புடன் செயற்பட்ட தனக்கு எதிராக சிவப்பு அறிக்கை பெற்றுக்கொள்ள முனையும் நல்லாட்சி அரசாங்கம் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிரான சுமார் 150 சிவப்பு அறிக்கைகளை ரத்துச் செய்துள்ளது என உத யங்க வீரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

பெரும் தீவிரவாதச் செயல்களுடன் தொடர்புடைய விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிரான குறித்த சிவப்பு அறிக்கைகள், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் அழுத்தம் காரணமாகவே ரத்துச் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷாவின் துணைவியாரான ஷிராந்தி ராஜபக்ஷவின் சகோதரனே உதயங்க வீரதுங்க மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவரின் மைத்துனர் என்ற கோதாவில் மிக முக்கிய நபராக உதயங்க செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# வெளிநாடுகளுக்கான செயற்பாடுகளுக்கு இலங்கை இராணுவத்தில் தனி செயலகம்

ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளில் இலங்கை இராணுவத்தை அதிகளவில் ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், இலங்கை இராணுவம்தனியானநடவடிக்கைப் பணியகம் ஒன்றை உருவாக்கவுள்ளது.

குகுலேகங்கவில் உள்ள இலங்கை இராணுவத்தின் அமைதி ஆதரவு நடவடிக்கைப் பயிற்சி மையத்துக்குச் சென்றிருந்த இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க, அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்த போது இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தில் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கான தனியான பணியகம் ஒன்றை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



இலங்கை இராணுவத் தலைமையகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

வெளிநாடுகளில் ஐ.நா. படைகளில் இலங்கை படையினரை அதிகளவில் ஈடுபடுத்துகின்றமையை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இந்தப் பணியகம் அமைக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சாரணர் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ். இந்துக் கல்லூரியின் சாரணர் துருப்பின் நூற்றாண்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாரணர் துருப்புத் தலைவர் பா. கஜேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். சாரணர் நூற்றாண்டு நூல் வெளியீடு, கலை நிகழ்வுகள், பெற்றோர் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளன.

# தினசரி ராசி பலன்

(22.02.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை ஸப்தமித்திதி. பி.இ.2.29 மணி வரை பின்னர் அஷ்டமி. நட்சத்திரம். பரணி பகல் 1.34 மணி வரை பின்னர் கார்த் திகை. சித்தயோகம் பகல் 1.34 மணி வரை பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 1.52 மணி முதல் 3.21 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 7.56 மணி முதல் 9.27 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மாசி மாத வளர்பிறை ஸப்தமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *பரணி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** - இன்பமான நாள். எதிர்பார்க்கும் உதவிகள் எதுவாயினும் கிடைக்கும். குடும்பத்துடன் ஸ்தலயாத்திரையை மேற்கொள்வார்கள். அரச வழியால் நன்மை உண்டாகும்.

**ரிஷபம்** - யோசனையான நாள். உத்தியோகத்தர்களுக்கு கடுமையான வேலைப்பளு அதிகரிக்கும். தொழில் பிரிவினருக்கு சக நிறுவனங்களின் போட்டிகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** - ஆக்கபூர்வமான நாள். உத்தியோகத்தர்களின் உயர் அதிகாரிகளின் அபிமானத்தால் உயர் பதவி, வசதியான இடமாற்றம் என்பன பெறுவார்கள். குடும்பத்தில் நிம்மதியான சூழ்நிலை நிலவி வரும்.

**கடகம்** - மத்திமபலன்கள் காணப்படுகின்றன. எந்த முயற்சியில் ஈடுபடும் போதும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செயற்பட வேண்டும். தொழில் வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்சினை இருக்கும்.

**சிம்மம்** - அதிஷ்டமான நாள். பணம் எல்லா வழிகளிலும் வந்து சேரும். தனியார் நிறுவனத்தால் பணிபுரிவோர் சம்பள உயர்வுகள் போன்ற சலுகைகளைப் பெறுவார்கள்.

**கன்னி** - அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். பணப்பற்றாக்குறையால் கடன் வாங்க அலைவார்கள். சிலர் சொந்த வீடு வாங்கும் நோக்கில் தரகரின் உதவியை நாடுவார்கள்.

**துலாம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. தொழில் வியாபாரத்தில் ஆதாயம் குறையும். குடும்ப நிலையில் நிம்மதி குறைவடையும். சுபநிகழ்ச்சி தொடர்பான முயற்சிகளில் தடங்கலுக்குப் பிறகு வெற்றி கிட்டும்.

**விருச்சிகம்** - இனிமையான நாள். ஆடை, ஆபரணச்சேர்க்கை, உறவினர் வருகை எல்லாமே மகிழ்ச்சியைத் தரும். பெண்களுக்கு மனம் போல் மாங்கல்யம் அமையும். எதிர்பாராத தனவரவால் மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு** - ஆக்கபூர்வமான நாள். தொழில் வியாபாரத்தில் சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் அனைவரின் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள்.

**மகரம்** - கவலையான நாள். பொருளாதார நிலை பாதிப்படையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும். கொடுத்த கடனை வசூல் செய்வது சுமாராக இருக்கும்.

**கும்பம்** - விருத்தியான நாள். நீண்டகாலமாக உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள், இடமாற்றம் என்பன கிடைக்கும். தொழிற்பிரிவினர் வளர்ச்சி நிலையைப் பெறுவார்கள்.

**மீனம்** - ஆக்கபூர்வமான நாள். குடும்பத்தில் முன்னேற்றம் பெண்களின் சாமர்த்தியமான போக்கு பயன்படும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் பெரும் ஆதாயங்கள் பெறுவர்.

**சந்திராட்டமநாள்: உத்தரம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கரு மங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# அக்கரப்பத்தனைக் காட்டுக்குள் கயிற்றில் தொங்கிய எலும்புக் கூடு

*7 நாள்களுக்கு முன் காணாமற் போனவருடையதாம்*

கண்டி, பெப்.22

அக்கரபத்தனை போபத்தலாவ காட்டுப் பகுதியில் வயோதிப ஆண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் எலும்புக் கூடாக கண்டெடுக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) கண்டெடுக்கப்பட்ட குறித்த எலும்புக்கூடு போபத்தலாவ பகுதியைச்சேர்ந்த ஆர்.எம். ரம்பன்டா (வயது 80) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இரு பிள்ளைகளின் தந்தையான ரம்பன்டா கடந்த வருடம் ஜூலை மாதம் வீட்டைவிட்டுச்சென்றுவீடு திரும்பவில்லை என உறவினர்களினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் இதுவரையில் காணாமல் போனமை தொடர்பாக எதுவித தகவல்களும் கிடைக்காத நிலையில், நேற்று விறகு சேகரிக்க காட்டுப்பகுதிக்குச் சென்ற ஒருவர் கயிற்றில் தொங்கிய நிலையில் எலும்புக்கூடு ஒன்று இருப்பதனைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். குறித்த எலும்புக் கூட்டை கண்டெடுத்த பொலிஸார் அது கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பாக தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# சைவத்தை வளர்ப்பதற்கு உழைத்தவர் நீலகண்டன்

**நல்லை ஆதீன முதல்வர் இரங்கல்**

எமது திருஞான சம்பந்த ஆதீனத்தை அழகான முறையில் புதுப்பித்து கம்பீரமாக காட்சியளிக்க வைத்தவர் கந்தையா நீலகண்டன். இந்து மாமன்றம் மூலம் இலங்கையெங்கும் சைவம் வளரப்பாடுபட்ட அன்னாரின் மறைவு கவலையைத் தருகின்றது. தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த கந்தையா நீலகண்டனின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். என நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

இந்து மாமன்றம் நடத்தும் அனைத்து விழாக்களுக்கும் எம்மை அழைத்து கௌரவம் தந்த அன்புள்ளம் மறைந்து விட்டது. சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு முற்று முழுதாகப் பாடுபட்ட அன்னாரின் மறைவு தமிழுலகுக்கே பெரும் இழப்பாகும். சிரித்த முகத்துடன் சைவ மாநாடுகளில் வலம் வந்த ஒளித் தீபம் அணைந்து விட்டது.

''எல்லோரும் வாழ வேண்டும் என்ற பெருநோக்குடன் முற்றுமுழுதாகத் தம்மையே அர்ப்பணித்து வாழ்ந்த அவரது ஆத்மா நல்லைக் கந்தப் பெருமானின் கமலத் திருவடிகளில் அமைதி பெற்றுச் சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்''.- என்றும் அவர் கூறியுள்ளார்.

# செயலமர்வு

யாழ். மாவட்ட அரச திணைக்களங்களுக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டிக்கான நெறிப்படுத்தல்களை தெளிவூட்டும் செயலமர்வு யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் என மாவட்ட செயலாளர் நா. வேதநாதன் அறிவித்துள்ளார்.

தேசிய உற்பத்தித் திறன் அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்படும் செயலமர்வில் திணைக்கள அலுவலகங்களிலிருந்து ஒரு பிரதிநிதி வீதம் கலந்துகொள்ளுமாறும் அறிவித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆலோசனைக் கூட்டம்

கிளிநொச்சி, பெப்.22

கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது. முன்னாயத்தம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பங்கு பற்றலுடன் நடைபெறவுள்ளது.

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ். மாவட்ட செயலக நடப்பு வருடத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அடுத்த மாதம் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது. இது தொடர்பில் நான்கு இணைத்தலைவர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை-

**வவுனியா பிரதேசத்தில்**- கோவில் குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், குருக்கள் புதுக்குளம், குருக்களூர், பறையனாலங்குளம் ஒரு பகுதி, ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகலஅழுத்வத்த, புபுதுகம, குருந்துப்பிட்டிய, பூ-ஓயா படை முகாம், ஈரப்பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம் SLBC, சாளம்பைக்குளம் பிரதேசம், சாளம்பைக்குளம் புதிய வீட்டுத்திட்டம், பூந்தோட்டம் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும்- மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

# மார்க்ஸூடன் கருத்து பரிமாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.22

தமிழக மனித உரிமைச் செயற்பாட்டாளர் அ. மார்க்ஸூடனான கருத்துப் பரிமாற்றக்களம் ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் 206 - 208 ஆம் இலக்கத்தில் உள்ள சி.டி.பி வங்கியின் கட்டட மேல் மாடி மண்டபத்தில் (வெலிங்கடன் தியேட்டர் சந்தி அருகில்) நடைபெறவுள்ளது.

ஏ. நடராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வை புதிய பண்பாட்டுத்தளம் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

(உ)

காலைக்கதிர்
Kalaikkathir



**சாரணியத் தந்தை கில்வெல் பேடன் பவல் பிரபுவின் 161 ஆவது பிறந்த தினம் (22.02.2018) இன்றாகும்.**



# 20 சிறார்களுடன் ஆரம்பித்த
# சாரணியம் இன்று உலகெங்கும் பரவி ஒளி வீசுகின்றது

“என்னால் கூடுமான வரையில் எனது சமயத்துக்கும் தேசத்திற்கும் எனது கடமைகளை செய்தேன் என்றும், எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும் சாரண விதிகளுக்கு அமைந்து பணிந்து நடப்பேன் என்றும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்’’

என்ற சாரணர் வாக்குறுதியை உலகுக்குத் தந்தவர் சாரணியத் தந்தை கில்பெல் பேடன்பவல். இவர் இங்கிலாந்திலே லண்டன் மாநகரில் 1857 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஒக்ஸ்போட் பேராசிரியர் றொபேட் கிறேஸ் பேடன் பவலுக்கும் பிரித்தானியா கடற்படைத் தளபதி அட்மிரல் வில்லியம் சிமித்தின் மகளுக்கும் ஏழாவது பிள்ளையாகப் பிறந்தார். தாய் தந்தையர் சூட்டிய நாமம் றொபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல். இவரது மூன்று வயதில் தந்தையார் இறைவனடி சேர்ந்தார். தாயின் அரவணைப்பில் ஏழு பிள்ளைகளும் கஷ்ட ஜீவன வாழ்க்கையை ஆரம்பத்தில் வாழ்ந்தனர்.

11 வயதில் உபகார சம்பளம் பெற்று இங்கிலாந்தின் சாட்டர் ஹவுஸ் கல்லூரியில் சேர்ந்தார். 1876 ஆம் ஆண்டு 19 வயதில் கல்லூரியில் பட்டம் பெற்று உடனேயே இராணுவத்தில் சேர்ந்தார்.

இந்தியாவில் நடைபெற்ற ‘‘கிரிமின்’’ யுத்தத்தில் பெரும் புகழ் பெற்றார். 26 வயதில் தளபதியாக உயர்வு பெற்றார். 1887 ஆம் ஆண்டு ஆபிரிக்காவிலே சுதேசிகளுக்கு எதிராக பெரும் யுத்தங்களை நடத்தினார். இவரது ஆண்மையையும் சாரணியத் திறமையையும் சுவடு தொடரும் திறமையையும் கண்டு சுதேசிகள் ‘‘இம்பிசா’’ என அழைத்தனர். இதன்




பொருள் ஒருபோதும் துயில் கொள்ளா ஓநாய்’’ என்பதாகும். 1899 ஆம் ஆண்டு 42 வயதிலே உப தளகர்த்தர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். ஒக்ரோபர் 13 ஆம் திகதி முதல் 1900 மே 18 ஆம் திகதி வரை 217 நாள்கள் எதிரிகளால் முற்றுகையிட்டிருந்த மேப்கிங் நகரைப் பாதுகாத்து உதவிக்கு வந்த படையுடன் மேப்கிங் நகரை காப்பாற்றினார். மேஜர் ஜெனரல் பதவிக்கு உயர்வு பெற்றார்.

44 வயதில் தென்னாபிரிக்காவில் இருந்து பெரும் வீரனாக தாய் நாடு வந்தார். ‘‘சாரணீயத்துக்கான துணை’’ என்னும் நூலை வெளியிட்டார். 1907 ஆம் ஆண்டு 50 வயதில் இங்கிலாந்து கால்வாயில் அமைந்துள்ள பிரவுன்ஸி தீவிலே இருபது சாரண சிறார்களுடன் பாசறை வாசம் நடத்தி முதன் முதலாக உலகுக்கு சாரணிய ஒளியைப் பரப்பினார். இப்பாசறை வாசம் சாரணியத் தந்தைக்கு பெரும் வெற்றியை அளித்தது.

51 வயதில் இருவாரங்களுக்கு ஒரு பிரசுரமாக ஆறு பிரசுரங்களாக ‘‘இளைஞர் சாரணியம்’’ என்னும் நூலை வெளியிட்டார். சித்திரங்களை தானே தீட்டினார். 52 வயதில் இராணுவத்தில் வகித்த பெரும் பதவியை விட்டுவிலகி இரண்டாம் வாழ்க்கையை சாரணியத்துக்காக வாழ்ந்தார். வருங்கால யுத்தங்களுக்கு சிலரைப் பழக்குவதிலும் பார்க்க வருங்கால சந்ததியினரை சாரணியத்தின் மூலம் யுத்தம் அற்ற உலகமாக்க முடியும் என்பதை உணர்ந்து உலகம் முழுவதும் சாரணியத் தொண்டு புரிய முன்வந்தார். 1910 இல் பெண்கள் சாரணயப் பிரிவை ஆரம்பித்தார். சாரணியத் தந்தையின் சகோதரி செல்வி அக்னஸ் முதலாவது பெண் சாரணராக சேர்ந்தார்.

1912 இல் 55 வயதில் ஒவெல் சென்கிளயர் சோம்ஸ்யை திருமணம் புரிந்தார். கீதர், பெற்றி, பீற்றர் மூன்று பிள்ளைகள் பிறந்தனர். பேடன் பவல் சாரணியத்தை உலக சகோதரத்துவ இயக்கமாக்குவதற்காக ஆரம்ப முயற்சியாக உலகப் பிரயாணத்தை மேற்கொண்ட வேளை முதலாவது உலக மகாயுத்தம் வந்து பயணம் தடைப்பட்டது. 59 வயதில் ஆறரை வயது தொடக்கம் 11 வயதினருக்கான குருளைச் சாரணர் பிரிவை ஆரம்பித் தார்.



இவ் ஆண்டிலேயே யாழ்ப்பாணத்தில் சாரணிய ஒளி ஐந்து கல்லூரி களில் பரவியது. அவை யாழ். மத்திய கல்லூரி, யாழ்.புனித பரியோவான் கல்லூரி, யாழ். புனித சம்பத் திரிசியார் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி. இக்கல்லூரிகள் இன்று நூற்றாண்டையும் கடந்து சாரணீயம் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

61 வயதில் 17-24 வயதினருக்கான திரிசாரணர் பிரிவை ஆரம்பித்தார். 1919 இல் கில் வெல் பாக் அமைக்கப்பட்டது. முதலாவது உலகமகாயுத்தம் முடிவுக்கு வந்ததும் 1920 இல் லண்டனில் முதன்முதலாக உலக சாரணர் அனைவரையும் ஒன்று திரட்டி ‘‘சர்வ தேசத்து சம்மேளனத்தை’’ நடத்தினார். இறுதிநாள் ஓகஸ்ட் 6 ஆம் திகதி ‘‘உலகப் பிரதம சாரணர்’’ எனப் பிரகடனம் செய்யப்பட்டார்.

64 வயதில் சாரணிய தந்தையும் துணைவியாரும் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை முதன்முதலாக மேற்கொண்டனர். யாழ். மண்ணிலே சாரணியம் சிறந்து விளங்குவதை கேள்வியுற்று யாழ். மண்ணில் கால் பதித்தார். இவ் வருகை யாழ்ப்பாண சாரணர்களின் உலக சாரணிய வரலாற்றுப் பதிவாகும்.

1925 ஆம் ஆண்டு வலுவிழந்தோருக்கான சாரணியப் பிரிவை ஆரம்பித்தார்.

1928 இல் உலகம் எங்கும் 20 இலட்சம் சாரணர்கள் இருக்கின்றமையைக் கண்ட ‘‘ஐந்தாம் ஜோர்ஜ் மன்னன்’’ ‘‘ கில்வெல் பேடன் பவல் பிரபு’’ என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தார். 1934 இல் இரண்டாம் முறையாக இலங்கைக்கு விஜயம் செய்தார்.

> பேடன் பவல் பிரபு இருமுறை இலங்கைக்கு விஜயம். யாழ் மண்ணிலும் கால் பதித்தார்.

பேடன் பவல் துணைவியாருடன் 80 வயதிலே தனக்கு மிகவும் பிரியமான ஆபிரிக்காவில் மிகவும் இயற்கை அழகு வாய்ந்த கென்னியா மலை அடிவாரத்தில் வாழ்ந்து வந்தார். 84 வயதுக்கு 45 நாள்கள் இருக்கையில் இறைவனடி சேர்ந்தார். சாரணியத் தந்தை இறந்தும் சாரணீயம் இன்று வரை பல லட்சம் சாரணர்களுடன் உலகெங்கும் பரந்திருப்பதற்குக் காரணம் பேடன் பவல் உருவாக்கிய சாரணிய வாக்குறுதிக்குள்ளேயும் சாரணியப் பத்து விதிகளுக்குள்ளேயும் பொதிந்திருக்கும் பொருள் அடக்கம்தான். உலகுள்ள வரைக்கும் சாரணியம் நிலைத்திருந்து மக்களை உன்னத வாழ்வு வாழவைக்கும் என்பதில் நம்பிக்கை உண்டு. ‘‘வளர்க சாரணியம். நல்வாழ்வு வாழ்க மக்களெல்லாம் ’’

**ஆயுள்வேத மருத்துவர்**
**இ. தில்லைவாசன்**
**(மத்தியின் ஜனாதிபதி சாரணன்,**
**உதவி மாவட்ட சாரண ஆணையாளன்,**
**யாழ்ப்பாணம்.**

**1900**



# மன்னார் நகரில் உள்ள பிரபல மருந்தகத்துக்கு 'சீல்' வைப்பு

மன்னார்,பெப்.22

மன்னார் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின்புலன்விசாரணை அதிகாரிகளால் மன்னார் நகர் மருந்தகங்கள் மற்றும் ஏனைய கடைகள் மீது திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோது பிரபல மருந்தகம் ஒன்றில் காலாவதியான மருந்துகள் விற்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு அது சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரில் அமைந்துள்ள மருந்தகங்களையும் ஏனைய கடைகளையும் மன்னார் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரனை அதிகாரிகள் கடந்த வாரம் திடீரென சிக்கிய எட்டு பேருக்கு எதிராக மன்னார் மாவட்ட நீதிவான் நீதி மன்றத்தில் செவ்வாய்க்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் மன்னார் நகரில் பிரபல மருந்தகம் ஒன்றில் காலாவதியான மருந்துகள் விற்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மருந்தக உரிமையாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இவ் அவர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டமையால் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், இந்த மருந்தகத்தை சீல் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் இது தொடர்பான வழக்கு எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் விற்காத இருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருவருக்கும் தலா 3,000 ரூபாவும், விலைப் பட்டியல் பார்வைக்கு வைக்காதமைக்காக ஒருவருக்கு 3,000 ரூபாவும், பாவனைக்கு உதவாத மருந்து விற்ற நபருக்கு ரூபா 10 ஆயிரமும் அபராதம் விதிக்கப்பட்டது.

(த112)

# நாடு முழுக்க பேரணிகள்; கூட்டு எதிரணி தீர்மானம்

எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் நாடு முழுவதும் பொதுமக்கள் பேரணிகளை நடத்த கூட்டு எதிரணி தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் பெற்றுள்ள வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ளவும், அரசின் மீதான பொதுமக்களின் வெறுப்பைத் தமக்கு உசிதமான முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் இதன் மூலம் கூட்டு எதிரணி உத்தேசித்துள்ளது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதன் பிரகாரம் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளும் பொது மக்கள் பேரணிகள் எதிர்வரும் ஆறு மாத காலப் பகுதிக்குத் தொடர்ச்சியாக நாடு முழுவதும் நடைபெறவுள்ளன. அத்துடன் கொழும்பிலும் குறுகிய கால அவகாசமொன்றில் பொதுமக்களைத் திரட்டிப் பொது மைதானம் ஒன்றில் பேரணியொன்றை நடத்தவும் கூட்டு எதிரணி உத்தேசித்துள்ளது.

இவ்வாறான பேரணிகள் ஊடாகக் கூட்டு எதிரணிக்கு நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கான பொது மக்கள் அழுத்தமொன்றை உருவாக்கவும் கூட்டு எதிரணி தீர்மானித்துள்ளது.

# நல்லிணக்க அலைவரிசையை ஆரம்பித்து வைத்தார் மைத்திரி



கொழும்பு, பெப். 22

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தமிழ் அலைவரிசையான நல்லிணக்க அலைவரிசையின் ஒளிபரப்பு நடவடிக்கையின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபன வளாகத்தில் இடம்பெற்றது.

தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பு வழங்கும் வகையில் இந்தப் புதிய நல்லிணக்க அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தமிழ் பேசும் மக்களின் தேசிய, சமய மற்றும் கலாசார அடையாளங்களை உறுதிப்படுத்தும் வகையிலான முழு நேர ஒளிபரப்புக்கள் இந்த அலைவரிசையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் மங்கள சமரவீர, மனோ கணேசன், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, பிரதி அமைச்சர் கருணாரத்ன பரனவித்தான, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான், வெளிநாட்டுத் தூதுவர்கள், சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட அதிதிகளும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி ரவி ஜயவர்தன, பணிப்பாளர் நாயகம் துஷிர மெலெவ்வேதந்திரி, செயற்பாட்டுப் பணிப்பாளர் அமல் கஜமன்கே உள்ளிட்ட பணிக் குழுவினரும் கலந்துகொண்டனர்.

(ஐ)



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 103

# உன்னைச் சரணடைந்தேன்

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



## “எந்தை அடி போற்றி”



மேற்சம்பவத்தைப் படித்ததும் ‘‘மாஸ்ரர், பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்காமல், எல்லாவற்றையும் சமாளிப்பார்’’ என்று ஒருவேளை நீங்கள் நினைத்திருக்கலாம். ஆனால், அது தவறு. பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பதில் அவரது ஆளுமை ஆச்சரியமானது. ஒருமுறை யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அது அமைந்திருந்த திருநெல்வேலி ஊராருக்கும் இடையே பெரு மோதல் வெடித்தது. ஒரு மாணவன் கத்திக் குத்துக்கு ஆளாகும் அளவிற்கு அம் மோதல் வளர்ந்தது. மாணவர்களைப் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியே வராதவாறு, ஊரார் சிறை செய்தனர். மிகப் பதற்றமான அச் சூழ்நிலையைத் தணிப்பதற்காக பொலிஸார் பல்கலைக்கழக அறிஞர்களையும் சமூக அறிஞர்களையும் ஒன்று கூட்டி, சமரசம் செய்ய முயற்சித்தனர். பல்கலைக்கழகத்தின் சார்பாக அப்போதைய துணைவேந்தர் சு.வித்தியானந்தன் அவர்களும் சில பேராசிரியர்களும் வருகைதர, ஊரார் சிவராமலிங்கம் மாஸ்ரர் தலைமையில் வந்தனர். அன்று, மாஸ்ரர் கோபத்தின் உச்சியில் துணைவேந்தரையும் மற்றைய பேராசிரியர்களையும் கடுமையாகக் கண்டித்தார். மாஸ்ரருக்குக் கோபம் வந்துவிட்டால், ஆங்கிலம் கொட்டத் தொடங்கிவிடும். அன்று, மாஸ்ரரது ஆங்கிலத் திறமையையும் ஆளுமையையும் தர்க்க ஆற்றலையும் சமூகப் பொறுப்புணர்வினையும் கண்டு, வந்திருந்த சிங்களப் பொலிஸ் அதிகாரிகள் எல்லாம் நடு நடுங்கிப் போயினர். அதுதான் சிவராமலிங்கம் மாஸ்ரர். தணிகிற இடத்தில் தணிந்தும் போவார், கொதிக்கிற இடத்தில் யாருக்கும் அஞ்சாமல் கொதிக்கவும் செய்வார்.

* * *

மாஸ்ரருக்கும் எனக்குமிடையில் ஒருமுறை சின்னதோர் மனக்கசப்பு ஏற்பட்டது. குமாரதாசன் எனது தங்கையைக் காதலிப்பது அறிந்து குமாரதாசனின் தந்தையார் மாஸ்ரரோடு போய் முறுகியிருக்கிறார். ‘அவையள் ஆர் ஆக்கள்? எப்படிப்பட்டவயள்?’ என்றெல்லாம் விசாரித்திருக்கிறார். என்றைக்கும் இல்லாமல் மாஸ்ரரும் ‘‘ எனக்கும் சரியாத் தெரியேல, நாங்கள் செம்பெடுக்கிற ஆக்கள் இல்ல என்டுசிலபேர்சொல்லுறவயள்’’ என்று வீணாகக் கதை வளர்த்திருக்கிறார். அதைக் குமாரதாசனின் தந்தை வீட்டில் சொல்ல குமாரதாசன் என்னிடம் வந்து சொல்ல, எனக்குக் கடுமையான கோபம் வந்து விட்டது. அவர்கள் எல்லோரும் தீவுப் பகுதியைச் சார்ந்தவர்கள். ஒரு காலத்தில் தீவுப் பகுதியில் திருமணம் செய்வதை யாழ்ப்பாணத்தவர்கள் விரும்ப மாட்டார்கள். நிலைமை அப்படியிருக்க, மாஸ்ரர் எங்களைக் குறைவாய்ப் பேசியது மனதை வருத்தியது. நான் சாதி பார்க்கிறவன் இல்லை. ஆனாலும், எனக்குள் இருந்த ஆணவ முனைப்பு, எப்படி என்னை இவர் இப்படிச் சொல்லலாம் எனக் கோபம் கிளப்பியது. நேராக மாஸ்ரரிடம் போனேன். தான் பேசியது என் காதுக்கு வந்துவிட்ட செய்தி மாஸ்ரருக்குத் தெரியாது. வாடாப்பா வாடாப்பா என்று வழக்கம் போல வரவேற்றார். என்ன? முகம் சரியில்லை! என்று அன்போடு விசாரித்தார். நான் சற்றுக் கோபத்தோடு, ‘‘என்னுடைய பண்பில ஏதாவது பிழை தெரிஞ்சதோ’’ என்று கேட்டேன். மாஸ்ரருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ‘‘ஏண்டாப்பா, என்ன பிரச்சினை? என்று பதறினார். இல்ல, நீங்கள் என்ர குலம் பற்றி ஐயப்பட்டதாய் என்று கேள்விப்பட்டன். திருவள்ளுவர் ‘‘நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவரை குலத்தின்கண் ஐயப் படும்’’ என்று, சொல்லியிருக்கிறாரல்லோ? அப்ப, எண்ட பண்பில ஏதோ குறை தெரிஞ்சபடியா தானே, நீங்கள் அப்படி நினைச்சிருக்கிறீங்கள். அது தான் கேட்டனான் என்றேன். மாஸ்ரர் வெலவெலத்துப் போனார். என்னுடைய நேர்த்தாக்குதலை அவர் எதிர்பார்க்கவில்லை. கண்களில் இருந்து நீர் வழியத் தொடங்கியது. மன்னிச்சிடுறாப்பா, ஆற்றயோ கதையைக் கேட்டு, நானும் தெரியாமக் கதைச்சிட்டன் என்று கையெடுத்துக் கும்பிட்டார். அவர் அப்படிச் செய்திருக்க வேண்டிய தேவையேயில்லை. அவருடைய பெருந்தன்மை அப்படிச் செய்ய வைத்தது. ‘‘சால்புக் கட்டளை யாதெனில் தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்’’ என்ற, குறளுக்கு இலக்கணமாய் மாஸ்ரரைப் பார்த்ததும், என் மனம் நிறைந்து மகிழ்ந்தது.

* * *

திருகோணமலைக் கம்பன் விழாவிற்காக, நாங்கள் எல்லோரும் பஸ்ஸில் போயிருந்தோம். நீண்ட பயணம். சுடுதண்ணிக்கிணற்று குளிப்பு, கோணேஸ்வரத் தரிசனம் என, எல்லா இடமும் மாஸ்ரரையும் இழுத்துத் திரிந்தோம். விழா முடிந்து திரும்பி வருகையில் முன் ‘சீற்றில்’ இருந்த மாஸ்ரர் உடன் வந்தவர்களை ஒவ்வொருவராய் அழைத்து, ‘‘ஜெயராஜ் களைச்சுப் போயிருப்பான், அவனுக்கு சோடாவக் கீடாவ வாங்கிக் குடுங்கோ’’ என்று, அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். தன்னுடைய ஊன உடம்பின் துயரம் மறந்து, எனக்காகக் கவலைப்பட்ட அந்த ஞானக் கடலை நினைக்கும் போதெல்லாம், இன்றும் என் கண்கள் குளமாகும்.

* * *

மாஸ்ரரின் மனைவி ஒரு போக்கான வர். கடும் கோபக்காரர். மாஸ்ரரைச் சில வேளை படாதபாடு படுத்துவார். ஆனால், மாஸ்ரரோ எந்த அதிர்வும் இல்லாமல் அவருடைய கோபங்களை உள்வாங்கி நிதானித்து நடப்பார். மாஸ்ரரின் மனைவி கோபக்காரர் என்ற ஒன்றைத் தவிர மிக நல்ல பெண்மணி. மாஸ்ரரைத் திட்டோ திட்டென்று திட்டவும் செய்வார். சில நேரத்தில், ‘‘ஜெயராஜ் எனக்கு வாய்ச்ச புருஷன் மாதிரி வேற ஆருக்குக் கிடைக்கும்’’ என்று பெருமையாகவும் பேசுவார். என்மேல் அவருக்கு நிறைய அன்பு. ஒரு நல்லூர்த் திருவிழாவின்போது, மதிய நேரம் உச்சி வெய்யிலில் கம்பன் கோட்ட கதவு தட்டப்பட, போய்த் திறந்தால் கொதிக்கும் வெய்யிலில் ஒரு பை நிறையத் தான் சமைத்த உணவுகளை, தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு ரீச்சர் நின்றார். ‘‘நல்ல சாப்பாடு சமைச்சனான் அது தான் உனக்கும் கொண்டு வந்தனான்’’ என்று சொல்லி, திருநெல்வேலியிலிருந்து நல்லூர் வரை நடந்து வந்த களை தெரியாமல் சிரித்த அந்த அன்னையின் கருணை கண்டு சிலிர்த்துப் போனேன். அது தான் ரீச்சர்.

* * *

நல்லையாதீன முதல் சந்நிதானம் சமாதியடைந்த போது, அவரது



உடலைச் சமாதி வைப்பது பற்றி ஒரு சர்ச்சை எழுந்தது. மாஸ்ரரின் நண்பரான ஒரு கடும் சைவர், மாஸ்ரரிடம் கோபமாக வந்தார். அப்போது நான் அங்கிருந்தேன். வந்தவர், ‘‘செத்தவர்கள் எல்லாம் சமாதியடைந்தவர்களா?’’ என்று, கொதிப்புடனே கேள்வி எழுப்பினார். மாஸ்ரர், எந்த விதப் பதற்றமும் இல்லாமல் ‘‘அது கிடக்கட்டும் நீங்கள் ஒண்டுக்கு பதில் சொல்லுங்கோ, சமாதியடைஞ்சவர்கள் எல்லாம் சாகாதவர்களா?’’ என்றாரே பார்க்கலாம். வந்தவருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. ‘‘உங்களப் போன்ற ஆக்கனால தான் சைவம் கெடுகுது’’ என்று, மாஸ்ரரைத் திட்டிக் கொண்டே போய்விட்டார்.

* * *

ஒரு நாள் நடு உச்சி வெய்யில் நேரம். கந்தர் மடத் தடியில் மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தேன். திடீரெனப் பார்த்தால் முன்னுக்கு மாஸ்ரர் தனது மூன்று சில்லுச் சைக்கிளை, முக்கி முக்கி இயக்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தார். வெய்யிலுக்காகத் தலையில் கட்டிய லேஞ்சியைத் தாண்டி வியர்வை வடிந்து கொண்டிருந்தது. அருகில் போய், என்ன இந்த வெய்யிலுக்குள்ள எங்க போறீங்கள்? என்று கோபித்தேன். ‘‘சரி, சரி சத்தம் போடாதடாப்பா. உதுலதான் என்ர மச்சான் ஒருத்தன் இருக்கிறான். அவனுக்குத் தான் சாப்பாடு கொண்டு போறன்’’ என்றார். திட்டிக் கொண்டே அவரோடு உடன் சென்றேன். ‘கேற்றடியில்’ நின்ற அவரது மச்சான், ‘‘என்ன சிவராமலிங்கம் ‘லேற்றாகியிட்டுது?’’’ என்று, குறை சொல்லியபடியே சாப்பாட்டை வாங்கினார். எனக்கோ கடுங்கோபம். ஆரோக்கியமாக இருந்த அவர், ஊன முற்ற மாஸ்ரரைக் கொண்டு சாப்பாட்டை வாங்கு வித்ததுமல்லாமல், குறையும் சொல்ல, எரிச்சலாய் வந்தது. ‘‘திரும்பி வரும் போது இனி மேல் சாப்பாட்டை அவர வந்து எடுக்கச் சொல்லுங்கோ’’ என்று சத்தம் போட்டேன். ‘‘சரியடாப்பா, சரியடாப்பா’’ என்று சிரித்தார். ஆனால் அடுத்த நாளும் மாஸ்ரர் சாப்பாடு கொண்டு போயிருப்பார், அது எனக்குத் தெரியும்.

* * *

நான் பேசத் தொடங்கிய ஆரம்பத்தில் தனக்கு வரும் பேச்சுக்கான அழைப்புகளுக்கு, சில வேளை என்னைப் போகச்சொல்லுவார். நான் பேச ஆசைப்பட்டுத் திரிந்த காலமது. ஒரு முறை யாழ். வைத்தியசாலை தாதிமார் விடுதியில் நவராத்திரிக்கு மாஸ்ரரைப் பேச அழைத்திருந்தார்கள். மாஸ்ரர் என்னைக் கூப்பிட்டு, ‘‘நீ ஒருக்காப் போய் பேசிட்டு வாடாப்பா’’ என்று அனுப்பி வைத்தார். மிக ஆர்வமாக நான் போனேன். அங்கிருந்தவர்கள் என்னைப் பார்த்துவிட்டு, ‘‘மாஸ்ரர்வரேலையோ?’’ என்று கேட்டார்கள். ‘‘இல்லை, மாஸ்ரர் என்னைத்தான் போய் பேசச் சொன்னவர்’’ என்றேன். அவர்கள், ‘‘மாஸ்ரர் வராட்டிப் பரவாயில்லை நாங்கள் சமாளிக்கிறம், நீங்கள் போய்ட்டு வாங்கோ’’ என்று, என்னைத் திருப்பி அனுப்பி விட்டார்கள். பிற்காலத்தில், எனது பேச்சுக்கு மவுசு வந்ததும், பட்டிமண்டபம் பேச மாஸ்ரரை அழைப்பேன் எந்த வித மறுப்பும் இல்லாமல், நான் நடுவராயிருக்க எனக்குக் கீழே அணித் தலைமையேற்றுப் பேசுவார். கல்வி ஆணவம் துளியளவும் இல்லாத அந்த மனிதரின் பெருந்தன்மை கண்டு வியப்பேன்.

* * *

மாஸ்ரரைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம். விரிவஞ்சிச் சுருக்கவேண்டியிருக்கிறது. என்னைப் பொறுத்தவரை, மாஸ்ரர் எனக்கு ஒரு ‘கோட்பாதர்’ கடைசிவரை என்னைக் கை பிடித்து வளர்த்தார். நான் என் நண்பர்களிடம் சொல்வேன், மாஸ்ரர் மாணவர்களின் கைபிடித்து நடப்பார் அல்லவா? அவர் மாணவர்களின் கையைப்பிடிப்பது, தன்னைத் தாங்குவதற்காய் அல்ல, மாணவனை தாங்குவதற்காய்த் தான். அவர் கை பிடித்து நடந்த பாக்கியம் பெற்றவர்களில் நானும் ஒருவன்.

* * *

‘சீசெல்ஸ்’ தீவிலிருந்து என்னைப் பேச அழைத்திருந்தார்கள் முதல் நாள் இரவு மாஸ்ரருடன் பேசி விட்டு, அடுத்த நாள் காலை புறப்பட்டேன். நான் ‘‘சீசெல்ஸ்’’ சென்று சேர்ந்த போது, மாஸ்ரரின் மறைவுச் செய்தி அங்கு காத்திருந்தது. அதிர்ந்து போனேன். உயிரற்ற அவரது உடலைப் பார்க்கக் கூட முடியவில்லை. அதிலும் ஒரு நன்மை இருந்தது. அதனாற்தானோ என்னவோ மாஸ்ரர் இன்றும் என் உள்ளத்தில் உயிருடனேயே வலம் வந்து கொண்டிருக்கிறார்.

* * *

(தொடரும்...)

# காணாமல்போனோர் விவகாரத்தில் ஐ.நா.சர்வதேச தலையீடு அவசியம்!

## அனைத்துலக ஈழத் தமிழர் மக்கள் அவை கோரிக்கை

முடிவின்றித் தொடரும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களின் உறவுகளின் நீதிக்கான போராட்டத்திற்கு ஒரு நல்ல தீர்வை சர்வதேசம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை சர்வதேச சமூகத்திடம் முன்வைப்பதோடு நீதிக்கான தீர்வைஐ.நா.சபையின்பாதுகாப்புச் சபைக்கு கொண்டுசெல்ல அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

காணாமல்ஆக்கப்பட்ட தமிழ் மக்க ளின் உறவுகளின் போராட்டம் ஒரு வருடம் பூர்த்தியடைவது தொடர்பில் அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-,

2009ம்ஆண்டுபோர்முடிந்து ஒன்பது வருடங்களைக் கடக்கும் நிலையில், சிங்களத்தால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்கான நீதி இன்றுவரை கானல் நீராகவே உள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சொந் தங்களால் மேற்கொள்ளப்படும் கவனவீர்ப்புப் போராட்டமானது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகிய 30ஆம் திகதி ஓகஸ்ட் மாதத்தையும் கடந்து இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது.

உலகிலேயே சிறிலங்காவில் தான் அதிக அளவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகம் உள்ளதாக கணிக் கப்படுகின்றது. ஐ.நா.மனித உரிமைச் சட்ட வரைபுகளுக்கு விரோதமாக மனித நேயத்தையே குழிதோண்டிப் புதைத்துவிட்டு தமிழ்மக்களைக் கொன்று குவித்த பௌத்த தேசமானது பௌத்த தர்மத்தையே நரகக் குழிக்குள் தள்ளிவிட்டுள்ளது.

சிறிலங்காவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசாங்கம் ஒரு முறையான பொறுப்பைக் கூற வேண்டும்எனக்கோரிஓர்ஆண்டு காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்காலவரையற்ற கவனவீர்ப்புப் போராட்டம், ஐ.நா. சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் உதாசீனம் செய்யும் சிறிலங்காவிடம் இருந்து நீதி கிடைக்கும் என்ற ஒரு நப்பாசையில் இரண்டாவது ஆண்டை நோக்கி கண்ணீரும் கம்பலையுமாக நகர்கின்றது.

இந்த ஓராண்டு காலத்தில் சிங்கள அரசு பலவிதமான உறுதிமொழிகளை அளித்தும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை நேரடியாக வந்து சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திய பிரதி பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்தன எழுத்துமூலமாக அளித்த உறுதிமொழியும் காற்றில் பறக்கவிடப்பட்டது. கடந்த வருடம் தைத்திருநாளில் யாழ்ப்பாணம் வந்த ரணில் விக்கிரமசிங்க வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் யாரும்உயிருடன் இல்லைஎன்று பொதுமேடையில் கூறினார். நல்லாட்சி நாயகர்களின் கபடத்தனத்தின் ஒரு வெளிப்பாடாகவே தமிழ்மக்கள் இவரின் நயவஞ்சகக் கூற்றை நோக்கினர்.

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஜனாதிபதிகொடுத்த வாக்கின்படி தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் கூடவெளியிடவில்லை. இறுதி யுத்தத்தின்போது 18000இற்கு மேற்பட்டோர் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது. இந்தக் காலப்பகுதியில் காணாமல் போயுள்ளவர்கள்தொடர்பாக நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார். ஆனால் இதுவரை எந்த முன்னெடுப்புக்களோ நடவடிக்கைகளோ எடுப்பட்டதாகத் தெரியவில்லை. இப்படியாக அமைச்சர்களதும் அரசியல் வாதிகளதும் உறுதிமொழிகள் காற்றில் பறந்தமை தான் மிச்சம்.

2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், இலங்கை நாடாளுமன்றத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் அமைப்பதற்கு ஒரு பிரேரணையை சிறிலங்கா அரசாங்கம் நிறைவேற்றியது. ஆனால், இன்று வரைக்கும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் வழக்குகளை விசாரிக்க பணிக்கப்பட்ட எல்லா வகையான ஆணைக்குழுக்களும் இதுவரைக்கும் எந்தவொரு வழக்கையும் விசாரணை செய்து தீர்த்ததாகத்தெரியவில்லை.அனைத்து விடயங்களிலும் தமிழ் மக்களை ஏமாற்றிக் காலத்தைக் கடத்தும் தந்திரோபாயத்தையே நிகழ்த்தி வருகின்றது நல்லாட்சி நாயகர்களின் நயவஞ்சக அரசு.

இலங்கையின் வடக்கிலும் கிழக் கிலும் உள்ள தெருக்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக தமிழ் பெண்களால் முன்னெடுக்கப்ப டுகின்ற எதிர்ப்பு போராட்டங்கள் தொடர்கின்றன. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது மற்றும் எந்த முகாம்களில் இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் போன்ற விவரங்களை வெளியிடாது தொடர்ந்தும் மக்களை ஏமாற்றி வருகின்றது இந்த இனவாத அரசு.

2017ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 26ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோர்தொடர்பாக நீதிகோரி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது கால அளவில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோர் தொடர்பான மூன்று பட்டியல்களை பத்திரிகைகளில் வெளியீடு செய்வதற்குத் தான் ஏற்பாடுசெய்வார் எனத் தெரிவித்திருந்தார். இவற்றுள் முதலாவது பட்டியலானது இறுதி யுத்தத்தின் முடிவில் சரணடைந்தவர்கள் மற்றும் யார், யாரெல்லாம் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளார்கள் என்பவை பற்றிய பெயர் பட்டியலாகும், இரண்டாவது பெயர் பட்டியலானது யாரெல்லாம் இரகசிய தடுப்பு காவல் முகாங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் பற்றியது, மற்றும் மூன்றாவது பெயர் பட்டியலானது யாரெல்லாம் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டு இருக்கின்றனரோ அவர்களின் பெயர் பட்டியல் ஆகும்.

ஆனால் இன்றுவரையும் ஶ்ரீலங்கா அதிபர், தன்னைச் சந்தித்து கோரிக்கைகளைச் சமர்ப்பித்த, இந்தவலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக நீதி கோரி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தான் கொடுத்த வக்குறுதியை நிறைவேற்றுவதில் பின்னடைவையே கண்டுள்ளார்.

மாறாகக் கடந்த வருடம் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டோர் யாரும் தனது ஆட்சியில் எந்த முகாம்களிலும் இல்லை என்று கூறி தமிழ்மக்களின் தலையில் பெரிய குண்டைத் தூக்கிப்போட்டார்.

முடிவின்றித் தொடரும் இம் மக்க ளின் நீதிக்கான போராட்டத்திற்கு ஒருநல்லதீர்வைசர்வதேசம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக் கையை சர்வதேச சமூகத்திடம் முன் வைப்பதோடு எமது நீதிக்கான தீர்வை ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்ல எல்லோருமாக ஒன் றிணைந்து செயற்படுவோம். - என்று உள்ளது.

(உ)

# முல்லைத்தீவில் கடும் வறட்சி; விவசாயிகளுக்கு நிவாரணம்

முல்லைத்தீவு, பெப் 22

வறட்சியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு, உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்காக அரசு 6 கோடி ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இதன்படி ஒரு மாத காலத்துக்கான உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கான பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியமுடிகிறது .

இன்னும் ஒரு மாத காலப்பகுதியில் இதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும், இதன் மூலம் வறட்சியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் சுமார் 14 ஆயிரத்து 500 விவசாயிகளது குடும்பங்கள்வரைபயனடைவார்கள் என் றும் தெரிவிக்கப்பட்டது.

# தியத்தலாவை அனர்த்தம் கண்டனத்துக்கு உரியது

## நாடாளுமன்றத்தில் டக்ளஸ் தெரிவிப்பு

தியத்தலாவைப் பகுதியில் வைத்து யாழ்ப்பாணத்திலிருந்து சென்றதாகக் கூறப்படுகின்ற பஸ்ஸில் ஏற்பட்ட அனர்த்தம் தொடர்பில் அரசியல்வாதிகள், பொறுப்புவாய்ந்த ஊடகங்கள் மிக அவதானமாகச் செய்திகளையும், தகவல்களையும் வெளியிட வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.



அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தச் சம்பவமானது கண்டிக்கத்தக்கதும், வருந்தத்தக்கதுமாகும். இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, உண்மைகள் அறியப்பட வேண்டும். அதேநேரம், பொறுப்புவாய்ந்த ஊடகங்கள், பொறுப்புமிக்க அரசியல்வாதிகள் இவ்விடயம் தொடர்பில் கருத்துக் கூறுகின்றபோது, செய்திகளை வெளியிடுகின்றபோது , தேசிய நல்லிணக்கத்திற்குப் பாதிப்புகள் ஏற்படாத வகையிலும், அப்பாவித் தமிழ் மக்கள் மீது பழியைப் போடாத வகையிலும் நடந்துகொள்ளவேண்டும்-என்றார்.

(ஐ)

# ஜெனீவாத் தூதுவராக அஸீஸ்



கொழும்பு, பெப் 22

ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக ஏ.எல். ஏ. அசீஸை நியமிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜெனீவாவுக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாக கடந்த மூன்றாண்டு காலத்திற்கும் மேலாகக் கடமையாற்றித் தற்போது சேவை நீடிப்பில் உள்ள ரவிநாத் ஆரியசிங்கவின் இடத்திற்கு ஏ.எல்.ஏ. அஸீஸின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 37ஆவது அமர்வு இம்மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் மாதம் 23ஆம்திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் எதிர்வரும் சில நாள்களுக்குள் ஏ.எல்.ஏ. அஸீஸ் தமது கடமைகளைப் பொறுப்பேற்பார் என வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சின் பல்வேறு பதவிகளை வகித்தவரான அஸீஸ் ஆஸ்திரியாவுக்கான இலங்கைத் தூதுவராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


(ஐ)

வினாத்தாள் 15 பகுதி I இன் தொடர்ச்சி...


44. சதுர வடிவமான மைதானமொன்றின் 4 மூலைகளிலும் A, B, C, D என்ற நான்கு சிறுவர்கள் முறையே நிற்கின்றனர். Aக்கு C வாயு மூலையில் நிற்பதாகத் தெரிகிறது. Cக்கு D கிழக்குத் திசையில் நிற்பதாகத் தெரிகிறது. இதற்கேற்ப Bக்கு Dக்கு நிற்பதாகத் தெரியும் திசை எது?
1) வடக்கு 2) வடமேற்கு 3) வடகிழக்கு

45. ஆறு மனிதர்கள் ஒரு வேலையை 4 நாட்களில் செய்து முடிப்பர். மேலும் இரண்டு மனிதர்கள் சேர்ந்தால் எத்தனை நாட்களில் அவ்வேலையைச் செய்து முடிப்பர்?
1) 3 2) 6 3) 2

46. தரப்பட்டுள்ள வடிவத்தைக் கொண்டு ஒரு சதுரமுகியை அமைக்கும் போது அது தோன்றும் விதம்?





47. கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்தை நிரப்புக.




1) 6 2) 5 3) 10

■ பின்வரும் தொடர்புகளில் ஒவ்வோர் உருவிற்கும் ஒரு பெறுமானம் உண்டு. அதற்கேற்ப 48ஆம், 49ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.



48.  இன் பெறுமானம் யாது?
1) 8 2) 11 3) 9

49.  இன் பெறுமானம் யாது?
1) 3 2) 9 3) 18

50. $6l$ பாத்திரத்தில் $\frac{2}{3}$ பங்கு நீர் உள்ளது. $4l$ பாத்திரத்தில் $\frac{1}{2}$ பங்கு நீர் உள்ளது. இரு பாத்திரங்களில் உள்ள நீரும் ஒரு பானைக்குள் ஊற்றப்பட்டால் மொத்த நீரின் அளவு,
1) $2l$ 2) 41 3) $6l$






# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
வினாத்தாள் 15
பகுதி - I நேரம்- 45 நிமிடம்
தரம்-5

வினாத்தாள் 15 பகுதி I இன் தொடர்ச்சி...

✧ ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

✧ 1ஆம், 2 ஆம் வினாக்களிற்குத் தரப்பட்டுள்ள எல்லாச் சொற்களுடனும் பொருந்தும் உருவைத் தெரிவு செய்க.

21. வாகனம், எரிபொருள், தலைக்கவசம்



22. உடற்பயிற்சி, சூழல் நேயம், சிக்கனம்



✧ தரப்பட்டுள்ள உருக்களை அடிப்படையாகக் கொண்டு 3 ஆம் 4 ஆம் வினாக்களிற்கு விடை தருக.




A B C D E F G H

23. பின்வருவனவற்றில் ஊனுண்ணிகள் கொண்ட கூட்டம்.
1. ADF 2. BEH 3. CFG

24. உணவை முழுமையாக விழுங்கும் பிராணிகளைக் கொண்ட கூட்டம்
1. AC 2. DF 3. B

25. பின்வரும் சம்பவத்திற்குப் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.
**யாருமற்ற மனிதனை இறைவனே காப்பாற்றுவார்.**
1. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்
2. ஆனைக்கும் அடி சறுக்கும்
3. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.

26. வினாக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண்



1. 4 2. 6 3. 10

27. இடைவெளியில் வரவேண்டிய இலக்கம்

| 1 | 5 | 2 |
|---|---|---|

| 2 | 13 | 3 |
|---|---|---|

| 3 | - | 4 |
|---|---|---|

1. 28    2. 23    3. 25

28. மகனைவிட தந்தை எப்போதும் நிறை கூடியவர் என்பது

1. பொய்யானது    2. உண்மையானது    3. கூற முடியாது

29. 1*l* பெற்றோலில் 40km பயணம் செய்யும் வாகனமொன்று 250 ml பெற்றோலில் எவ்வளவு தூரம் பயணம் செய்யும்?

1. 10 km    2. 20 km    3. 80 km

30. பின்வரும் பாடல் வரிகளை சரியாக ஒழுங்கமைக்கும் போது பெறப்படும் ஒழுங்கு முறை

A. மேதை யாக மாற்றினன்

B. ஓதி உணரச் செய்தனன்

C. பெரிய அறிஞன் கண்டனன்

D. பேதையாக ஒருவனைப்

1. BCDA    2. DCBA    3. CDAB

31. 16 தொடக்கம் 25 வரையுள்ள எண்களில் 3, 4 ஆகிய இரு எண்களாலும் வகுக்கும் போது மீதியின்றி வகுக்கக் கூடிய எண்களின் எண்ணிக்கை

1. 2    2. 4    3. 1

32. 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி வியாழக்கிழமை எனின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி என்ன கிழமை.

1. வியாழக்கிழமை    2. புதன்கிழமை    3. வெள்ளிக்கிழமை

33. 2018 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனின் அம்மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத் தொகை

1. 85    2. 75    3. 80

34. இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

அரிசி ⟶ உணவு

கறுவா ⟶ வாசனைத் திரவியம்

தேயிலை ⟶ ..............................

1. ஏற்றுமதி    2. அலங்காரம்    3. பானம்


35. அனேக பறவைகள் உயரமான இடங்களில் கூடு கட்டுவதன் காரணம்



1. பறப்பதற்கு இலகுவாக இருத்தல்
2. குளிர்மையைப் பெற்றுக்கொள்வதற்கு
3. எதிரிகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு








■ முதலாம் இரண்டாம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.

36. 




1)     2)     3) 


37. 




1)     2)     3) 

38. 38ஆம், 39ஆம் வினாவின் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.



1)     2)     3) 

39. 

1)     2)     3) 

40. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

888 + [     ] + [8+] 8 [+] 8 [=] 1000

1) 22    2) 44    3) 88

41. 1 இற்கும் 20 இற்கும் இடையிலுள்ள இரட்டையெண்களின் எண்ணிக்கை யாது?

1) 9    2) 10    3) 11

42. ஒரு பேருந்தொன்றில் உளள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 8    2) 12    3) 32

43 ஒரு செவ்வகத்தின் பரப்பளவு $36cm^2$ கொண்டது. அதேயளவு பரப்பளவைக் கொண்ட சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளம் யாது?

1) 9 cm    2) 6 cm    3) 4 cm

# சிரியாவில் அரசுப்படைகளின் ஆவேசத் தாக்கு; 48 மணித்தியாலத்தில் 250 பேர் பரிதாபச் சாவு!





டமாஸ்கஸ்,பெப்.22

சிரியாவில் கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்து அரசுப்படையினர் நடத்திய ஆவேசத் தாக்குதலுக்கு கடந்த 24 மணிநேரத்தில் 250இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர் என போர்மனித உரிமைக்கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அரசு ஆதரவுப்படையினர் இதுவரை இல்லாத அளவுக்கு ஆவேசத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த 2013ஆம் ஆண்டுக்கு பிறகு முதன் முறை இப்படி ஓர் அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அமெரிக்க உளவு அமைப்பு ஆயுத உதவிகளை நிறுத்தியமையால் கிளர்ச்சியாளர்கள் பல இடங்களில் வீழ்ந்து வருகின்றனர்.

இந்தச் சூழலைச் சாதகமாகக் கொண்டு விரைவில் போராளிகளை அழிக்கும் நோக்கில் அரசுத்தரப்பு கூட்டுப்படையினர் கிழக்கு கூத்தா பகுதிகளில் ஓயாது வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதில், சிக்கிக் கடந்த 48 மணி நேரத்தில் 250 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என போர் மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மட்டும் நூற்றுக் கணக்கான அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. இதில், பாதிக்கும் மேற்பட்டவர்கள் 10 வயதுக்கும் குறைவானவர்கள் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இன்னும் சில நாள்கள் இதே போன்ற தாக்குதல் தொடர்ந்தால் பொதுமக்கள் பலி எண்ணிக்கை கணிசமாக உயரும் என அச்சம் எழுந்துள்ளது.

## துப்பாக்கி வாங்குவோருக்கு அமெ. புதிய கட்டுப்பாடுகள்



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், நாட்டில் துப்பாக்கி வாங்குவோர்களுக்கு புதிய கட்டுப்பாடுகளை அதிரடியாக அறிவித்துள்ளார்.

புளோரிடா மகாணத்திலுள்ள ஒரு பள்ளியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் நாடெங்கும் துப்பாக்கி உபயோகத்திற்கு மக்களிடையே கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதனிடையே அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், நாட்டில் துப்பாக்கி வாங்குவோர்களுக்கு புதிய கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளார்.

இதன்படி, புதிதாகத் துப்பாக்கி வாங்குவோர்களின் முழுப் பின்னணி விவரங்கள் அறிந்த பிறகே அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

## மலேசியப் பிரதமரை கோமாளியாக சித்திரித்த ஓவியருக்குச் சிறை!

மலேசிய பிரதமர் நஜிப் ரசாக்கை கோமாளி போல சித்திரித்த பிரபல ஓவியர் பாஹ்மி ரேசாவிற்கு ஒரு மாத சிறைத்தண்டனையும், 7 ஆயிரத்து 700 டொலர் அபராதமும் விதித்து நீதிமன்று தீர்ப்பு அளித்துள் ளது.

மலேசியாவில் நஜிப் ரசாக் பிரதமராக இருந்து வருகிறார். இவரை கோமாளி போல சித்திரித்து பிரபல ஓவியர் பாஹ்மி ரேசா கேலிச்சித்திரம் தீட்டி இணையதளத்தில் வெளியிட்டார்.



இது அங்கு பர பரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. விசாரணையின்போது, பாஹ்மி ரேசா மீது ஆபாசமான, தவறான, அச்சுறுத்தலை ஏற்படுத்துகிற, ஒரு நபரை தொல்லை செய்ய விரும்புகிற உள்ளடக்கத்தை பரப்பினார் எனக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

விசாரணை முடிந்துள்ள நிலையில், அவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனையும், 7 ஆயிரத்து 700 டொலர் அபராதமும் விதித்து நீதிமன்று தீர்ப்பு அளித்தது.

## 66 பேரைப் பலிகொண்ட விமானம் கண்டுபிடிப்பு

ஈரானில் 66 பேருடன் மலையில் மோதி விழுந்து விபத்துக்குள்ளான விமானம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் கடந்த 18ஆம் திகதி 66 பேருடன் புறப்பட்ட ATR 72-500 என்ற விமானம் ஜாக்ரோஸ் மலையில் மோதி விபத்துக்குள்ளானது.

பயணம் செய்த அனைவரும் பலியாகினர் என அறிவிக்கப்பட்ட நிலையில், மோசமான வானிலை காரணமாக மீட்புப்பணிகளில் தாமதம் ஏற்பட்டது. இந்த நிலையில் விமானத்தைத் தேனா மலைப்பகுதியில் இராணுவ ஹெலிக்கொப்டர் கண்டறிந்துள்ளது.

இது தொடர்பாகக் காவல்துறை செய்தித் தொடர்பாளர் கூறுகை யில்,

இராணுவத்தின் ஆளில்லா விமானங்கள் மூலம் விமானம் பற்றி ஆய்வு மேற்கொண்டோம். ஆய்வுகளின் அடிப்படையில் இரு இராணுவ ஹெலிக்கொப்டர்கள் அனுப்பப்பட்டன. அங்கேயே தங்கியிருந்த மீட்புக் குழுவினர் பொதுமக்களின் உதவியுடன் மீட்பு பணிகளை மேற் கொண்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆளில்லா விமானங்கள் மூலம் எடுக்கப்பட்ட 500 படங் களின் உதவியுடன் விமானம் விழுந்து நொறுங்கிய இடம் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (பு)

## 39 பெண்களை மணந்த நபர்; 103 குழந்தைகளுக்குத் தந்தை

நைராபி,பெப்.22

கென்யாவில் வாழும் நபர் ஒருவர் 39 பெண்களைத் திருமணம் செய்து கொண்டு 103 குழந்தைகளுக்கு தந்தையாகியுள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

நண்டோலியா கிராமத்தைச் சேர்ந்தவர் நபி யோகனா. 68 வயதான இவர், தன்னைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தீர்க்கதரிசி ஜானின் அவதாரம் எனக் கூறிக் கொள்கிறார்.

இவர் இதுவரை 39 பெண்களைத் திருமணம் செய்து கொண்ட நிலையில் 103 பிள்ளைகளுக்கு தந்தையாகியுள்ளார். இதோடு யோகனாவுக்கு 232 பேரக் குழந்தைகளும் உள்ளனர், இவரின் மூன்று மனைவிகள் உயிரிழந்து விட்டனர். சிறுவயதிலிருந்து மாமிசம் சாப்பிடாத இவர் ஒருமுறை கூட முகத்தைச்சவரம் செய்து கொண்டதில்லை. அது பற்றி நபி யோகனா கூறுகையில்,



48 பெண்களை மணக்கத் திட்டம்

நான் என் வருங்கால மனைவிகளைத் தேடிச் செல்வதில்லை, கடவுள் தான் என்னை நோக்கி அனுப்பி வைக்கிறார். கடவுளின் சொற்படி நான் 48 பெண்களைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும், அதைச் செய்வேன் எனக் கூறியுள்ளார்.

தான் 280 ஆண்டுகள் வாழ்வேன் என கூறும் யோகனா அதன் பின்னர் இறந்து மீண்டும் மறுபிறவி எடுத்து அடுத்த 2ஆயிரத்து 700 ஆண்டுகளுக்கு வாழ்வேன் எனக் கூறுகிறார்!

## மாலைதீவில் அரசியல் குழப்பம்; கிழக்கு இந்தியக் கடலில் சீனப் போர்க்கப்பல்கள்

மாலைதீவுப் பதற்றத்துக்கு இடையே 11 சீனப் போர்க்கப்பல்கள் கிழக்கு இந்தியப் பெருங்கடலில் நுழைந்துள்ளன எனத்தகவல்கள் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்தியப் பெருங்கடல் தீவு நாடான மாலைதீவில் அரசியல் குழப்பமான சூழலில், அந்த நாட்டின் சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி அப்துல்லா சயீத், நீதிபதி அலி ஹமீத் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மாமூன் அப்துல்கயூம் உள்ளிட்டவர் கள்கைது செய்யப்பட்டுள்ளனர். அங்கு நெருக்கடி நிலையை அதிபர் மாமூன் அப்துல்கயூம் அமுல்படுத்தியுள்ளார். மாலைதீவு விவகாரத்தில் இந்தியா இராணுவத்தை அனுப்பித் தீர்வு காண உதவவேண்டும் என்று அந்த நாட்டின் முன்னாள் அதிபர் முகமது நஷீத் கேட்டுக் கொண்டார்.

இருப்பினும் மாலைதீவு பிரச்சினையில் இந்தியா நேரடியாக தலையிடாமல், நிலைமையை உற்று நோக்கி வருகிறது. இந்த நிலையில் 11 சீனப்போர்க்கப்பல்கள் கிழக்கு இந்தியப் பெருங்கடலில் நுழைந்து உள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

# பாடம் படிப்பதை யாராலும் தடுக்க முடியாது



## கமலஹாசன் பரபரப்புப் பேட்டி

ராமேஸ்வரம், பெப்.22

நான் பள்ளிக்கு செல்வதைத் தடுக்கலாம் ஆனால் பாடம் படிப்பதைத் தடுக்க முடியாது எனக் கமலஹாசன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் இல்லத்திலிருந்து அரசியல் பயணத்தை தொடங்கிய கமலஹாசன், மீனவர்களை சந்தித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

நான் கட்சிக்கு ஆள் சேர்க்க வரவில்லை என்றும் உங்களுடன் சேரவே வந்திருக்கிறேன். மக்கள் முன்பாக கொடி ஏற்றவேண்டும். மக்கள் முன்பாக கொள்கையை விளக்க வேண்டும். கட்சிக் கொள்கைகளை மதுரையில் அறிவிப்பேன் அனைவரும் அங்கு வாருங்கள் என அழைப்பு விடுத்தார்.

மேலும் கலாம் வீட்டுக்கு சென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இது அரசியல் அல்ல. நான் படித்த பாடத்தில் ஒரு பகுதி கலாம். நான் பள்ளிக்குச்செல்வதைத்தடுக்கலாம், பாடம் படிப்பதை யாராலும் தடுக்க முடியாது. கலாம் படித்த பள்ளிக்கு செல்ல முயன்றதில் அரசியல் இல்லை.

ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். சினிமாவை விட அரசியலில் அதிக பொறுப்புள்ளது. அரசியலுக்கு வர அவர்கள் செய்யும் தொழில் முக்கியமில்லை என்று தெரிவித்துள்ளார்.

தமிழக மக்களின் உள்ளங்களில் வாழ்ந்த நான், இனி அவர்களது இல்லங்களில் வாழ ஆசைப்படுகிறேன் என்றும் கமல் தெரிவித்துள்ளார்.

## ம.பி.யில் வீடுகளுக்குள் புகுந்து லொறி விபத்து!

### 8 பேர் சாவு



மத்தியப்பிரதேச மாநிலம் போபால் அருகே இரும்புக்கம்பிகள் ஏற்றி வந்த லொறி, வீடுகளுக்குள் புகுந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

மத்தியப்பிரதேச மாநிலத்தின் போபால் அருகே உள்ள பரேலா என்ற கிராமத்தில் நேற்றுக் காலை இரும்புக்கம்பி ஏற்றிக் கொண்டு வந்த லொறி ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் ஓரம் இருந்த வீடுகளுக்குள் திடீரெனப் புகுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 8 பேர் பரிதாபமாகப் பலியாகினர். மேலும், 4 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து நடந்த இடத்திற்கு பொலிஸார் தாமதமாக வந்தமையால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் பொலிஸ் ஜீப்பைத் தீவைத்துக் கொளுத்தினர். இதனால்,அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இதனை அடுத்து, விபத்தை ஏற்படுத்திய லொறியின் ஓட்டுநரைக் பொலிஸார் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கமல் தலைவராக முடியாது



### தமிழிசை விமர்சனம்

நடிகர் கமலஹாசன் தலைவராக முடியாது என பா.ஜ.க தமிழகத் தலைவர் தமிழிசை விமர்சித்துள்ளார்.

நடிகர் கமலஹாசன் ராமேஸ்வரத்தில் உள்ள அப்துல் கலாம் இல்லத்தில் இருந்து நேற்றுத் தனது அரசியல் பயணத்தைத் தொடங்கியுள்ளார். தனது கட்சியின் பெயர், கொள்கைகளை இன்று அறிவித்துள்ளநிலையில், கமலின் அரசியல் வருகையை பா.ஜ.க மாநில தலைவர் தமிழிசை விமர்சித்துள்ளார்.

அரசியல் பயணத்தை தொடங்கியுள்ள கமலஹாசன் தலைப்புச் செய்தியாகத்தான் இருப்பாரே தவிர, தலைவராக முடியாது. திரைப்படப் போட்டிகளை போல அரசியல்கட்சி தொடங்கியுள்ளார் எனத் தமிழிசை விமர்சித்துள்ளார்.



இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து வரும் கனடாப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் உள்ள சீக்கியர்களின் புனிதத் தலமான பொற்கோவிலில் குடும்பத்தினருடன் வழிபாடு செய்தார்.

## கமலஹாசன் புரியாத மொழியில் பேசுகிறார்



அமைச்சர் ஜெயக்குமார்

சென்னை,பெப்.22

நடிகர் கமலஹாசன் புரியாத மொழியில் சொல்லி விமர்சிப்பதால், அவர் சொல்வது யாருக்கும் புரியவில்லை என்று மீன்வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

நடிகர் கமலஹாசனின் அரசியல் பிரவேசம் தொடர்பாக அமைச்சர் ஜெயக்குமார் கூறியதாவது,

நடிகர் கமலஹாசன் ஒரு தலைவருக்கு உள்ள முதிர்ச்சி இல்லாமல் நடந்து கொள்கிறார். அவரது பேச்சுப் பலருக்கு புரியாது. கட்சி நடத்துவதற்கான அனுபவமும் இல்லை.

அவர் காலையிலேயே பள்ளிக்கூடம் சென்று வருகிறார். பள்ளிக்கூடம் என்பது அரசியல் செய்வதற்கான இடம் கிடையாது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பள்ளிக் கூடத்துக்கு சென்றா அரசியல் நடத்தினார்? 6 கோடி தமிழ் மக்கள் எம்.ஜி.ஆருக்கு ஆதரவு கொடுத்தனர். புரட்சித்தலைவி எம்.ஜி.ஆரை பின்பற்றி திட்டங்களை முன்னெடுத்துச் சென்றார். அவர் மாபெரும் தலைவராக இன்றைக்கும் மக்கள் மத்தியில் விளங்குகிறார்.

பள்ளிக்கூடத்துக்கு காலை 7.30 மணிக்குச் சென்ற ஒரே நடிகர் கமலஹாசன் தான் என்று தெரிவித்துள்ளார்.

## அப்துல் கலாம் வீட்டிலிருந்து அரசியல் பயணம் பெரும்பேறு



நடிகர் கமல்

நடிகர் கமலஹாசன் இராமேஸ்வரத்தில் உள்ள அப்துல் கலாம் வீட்டிலிருந்து தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தமை பெரும் பேறு எனக் கூறியுள்ளார்.

அரசியல் பயணத்தை கலாம் கற்ற பாடசாலையில் இருந்து நேற்று ஆரம்பித்தபின் கமல் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியதாவது,

பிரமிப்பூட்டும் எளிமையைக் கண்டேன், கலாமின் இல்லத்திலும், இல்லத்தாரிடமும். அவர் பயணம் துவங்கிய இடத்திலேயே நானும் என் பயணத்தைத் தொடங்கியதை பெரும்பேறாக நினைக்கிறேன் என கமலஹாசன் தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து ஒன்றையும் பதிவிட்டுள்ளார்.



## சுதந்திரக் கிண்ண கிரிக்கெட்:
# முதல் போட்டியில் இலங்கை - இந்தியா




இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் சுதந்திரக் கிண்ண முத்தரப்பு கிரிக்கெட் தொடரின் போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இத் தொடரின் முதல் போட்டியில் இலங்கை மற்றும் இந்திய அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இலங்கையின் 50ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சுதந்திரக் கிண்ண கிரிக்கெட் தொடரானது தற்போது 20வருடங்களுக்குப்பிறகு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை – இந்தியா – பங்களாதேஷ் அணிகள் மோதும் இந்த சுதந்திரக் கிண்ண முத்தரப்பு போட்டித் தொடரானது இருபதுக்கு 20 போட்டியாக நடத்தப்படுகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகும் இத் தொடர் மார்ச் மாதம் 18ஆம் திகதி வரை நடைபெற வுள்ளது. இப் போட்டிகள் அனைத்தும் கொழும்பு ஆர்.பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இரவுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இத் தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப் பட்டுள்ளது. அதன்படி மார்ச் மாதம் 6ஆம் திகதி நடைபெறும் முதல் போட்டியில் இலங்கை – இந்தியா மோதுகின்றன.

மார்ச் 8: பங்களாதேஷ் - இந்தியா
மார்ச் 10: இலங்கை - பங்களாதேஷ்
மார்ச் 12: இலங்கை -- இந்தியா
மார்ச் 14: பங்களாதேஷ் - இந்தியா
மார்ச் 16: இலங்கை - பங்களாதேஷ்

ஆகிய அணிகள் மோதுகின்றன. இத் தொடரின் இறு திப் போட்டி மார்ச் மாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இளம் வயதில் முதல் இடம் ஆப்கன் வீரர் சாதனை




ஆப்கானிஸ்தான் சுழற் பந்து வீச்சாளர் ரஷித் கான் 19 வயதிலேயே ஒருநாள் பந்து வீச்சு தரவரிசையில் முதல் இடம் பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான். இவர் சமீப காலமாக சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தி வருகிறார். தற்போது ஆப்கானிஸ்தான் அணி சிம்பாப்வேயை எதிர்த்து ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடியது. இதில் ஆப்கானிஸ்தான் 4:1 என வெற்றி பெற்றது. ஐந்து போட்டிகளில் ரஷித் கான் 16 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்

இதேபோல் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 6 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ரா சிறப்பாகப் பந்து வீசினார். இதனால் இருவரும் ஒருநாள் போட்டிக்கான பந்து வீச்சு தரவரிசையில் முதல் இடத்தை பிடித்துள்ளனர். இருவரும் முதல் இடத்தை பிடிப்பது இதுதான் முதன்முறையாகும்.

குறிப்பாக ரஷித்கான் 19 வயது 153 நாள்களில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். இதன்மூலம் மிக இளம் வயதில் முதல் இடத்தைப் பிடித்த வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

## லாராவை முந்திய கோஹ்லி



சர்வதேசகிரிக்கெட்டில் ஒட்டுமொத்தமாக அதிக புள்ளிகள் எடுத்த வீரர்கள் பட்டியலில் மேற்கிந்தியத் தீவு முன்னாள் கப்டன் பிரையன் லாராவை பின்னுக்கு தள்ளினார் விராட் கோஹ்லி.

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் விராட் கோலி 909 புள்ளிகளுடன் தற்போது முதலிடத்தில் இருக்கிறார். எல்லாக் காலத்திலும் சேர்த்து ஐ.சி.சி. ஒரு நாள் போட்டித் தர வரிசையில் மேற்கிந்தியத் தீவின் விவியன் ரிச்சர்ட்ஸ் 935 புள்ளிகள் (1985ஆம் ஆண்டு) எடுத்ததே அதிக பட்சமாகும்.

ஒட்டுமொத்தமாக அதிக புள்ளிகள் எடுத்தவர்களின் பட்டியலில் பாகிஸ்தானின் ஜாகீர் அப்பாஸ் (931 புள்ளி) 2ஆவது இடத்திலும், ஆஸ்திரேலியாவின் கிரேக் சேப்பல் (921 புள்ளி) 3ஆவது இடத்திலும், இங்கிலாந்தின் டேவிட் கோவர் (919 புள்ளி) 4ஆவது இடத்திலும், ஆஸ்திரேலியாவின் டீன் ஜோன்ஸ் (918 புள்ளி) 5ஆவது இடத்திலும், பாகிஸ்தானின் ஜாவித் மியாண்டட் (910 புள்ளி) 6ஆவது இடத்திலும் உள்ளனர். இதற்கு அடுத்து 7ஆவது இடத்தில் கோஹ்லி இருக்கிறார்.

இதுவரை 908 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தில் இருந்த மேற்கிந்தியத் தீவு முன்னாள் கப்டன் பிரையன் லாரா, கோஹ்லியின் வருகையால் 8ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

## ஐந்து நாடுகள் மட்டுமே டெஸ்டில் விளையாடும்

10 ஆண்டுகளுக்குப் பிறகு ஐந்து நாடுகள் மட்டுமே டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் என்று கெவின் பீட்டர்சன் கூறியுள்ளார்.

இங்கிலாந்து முன்னாள் வீரர் கெவின் பீட்டர்சன் தனது டுவிட்டர்பக்கத்தில் கூறிஇருப்பதாவது,

டெஸ்ட் கிரிக்கெட்டின் மோகம் குறைந்து வருகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் 5 நாடுகள் மட்டுமே டெஸ்டில் விளையாடும். இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மட்டுமே ஆடும்.

மேலும், மற்ற அணிகள் ஒருநாள் போட்டியில் ஆடுவதைத் தான் விரும்பும். நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவு, இலங்கை ஆகிய நாடுகள் டெஸ்டில் இருந்து சென்றுவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.


கெவின் பீட்டர்சன்

## புதிய பயிற்சி முறையை அறிமுகப்படுத்திய ஆஸி.

வீரர்களுக்கான பயிற்சியில் புதிய முறையை அறிமுகப் படுத் தியுள்ளது ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி.

இந்தப் பயிற்சி முறையில், ஒரு திரையின் பின்பக்கம் இருக்கும் பயிற்சியாளர், பந்தை மறுமுனையில் இருக்கும் வீரருக்கு, திரையின் கீழ் வழியாக வேகமாக வீசுகிறார். அவ்வாறு வரும் பந்தை சரியாக அந்த வீரர் பிடிக்க வேண்டும்.

இதன் மூலமாக, எப்படி பந்தைப் பார்க்காமல் பிடிப்பது என்பதைக் கற்றுக்கொள்ளலாம். மேலும், வீரர்களின் எதிர் வினையாற்றும் வேகமும் அதிகரிக்கும்.

அத்துடன் பந்தைப் பார்க்காமல் எளிதாக யூகித்து, விக்கெட் எடுக்கவும் முடியும். இதனால் கட்சிகளை வீரர்கள் விடமாட்டார்கள் எனக் கூறப்படுகிறது.

இதேபோல, மறைப்பு இல்லாமல் எப்படி பயிற்சி செய்ய வேண்டும் என்றும் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இந்த பயிற்சி முறை அனைவரையும் கவர்ந்துள்ளது. மேலும், இதனை துடுப்பாட்டப் பயிற்சிக்கும் பயன்படுத்தலாம் எனவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

(பு)

# இரட்டைச்சத வெற்றிக்கிண்ணம் (Battle Of The Blues)





வடமராட்சி இளைஞர்களுக்கும், யாழ்ப்பாண இளைஞர்களுக்குமான ஓர் நட்புறவுப் போட்டியாக நடத்தப்படும் இரட்டைச்சத வெற்றிக்கிண்ணத்திற்கான 3 ஒரு நாள் தொடர் போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இத்தொடரில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஹாட்லியைற்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இத் தொடரில் முதலாவது ஒரு நாள் போட்டி 25.02.2018 ஞாயிற்றுக்கிழமையும் இரண்டாவது ஒருநாள் போட்டி 01.03.2018 வியாழக்கிழமையும், 3 ஆவது ஒரு நாள் போட்டி 04.03.2018 ஞாயிற்றுக்கிழமை ஹாட்லி விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

2016 ஆம் ஆண்டு தொடரின் 1 ஆவது போட்டியில் யாழ். சென்றல் அணி 17 ஓட்டங்களாலும், 2 ஆவது போட்டி ஹாட்லியைற்ஸ் அணி 113 ஓட்டங்களிலும், 3ஆவது போட்டியில் ஹாட்லியைற்ஸ் அணி 3 விக்கெட்டுக்களாலும் வெற்றி பெற்று தொடரை ஹாட்லியைற்ஸ் அணியிர் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

நடைபெறும் போட்டிகள் வர்ண ஆடை, வெள்ளைப் பந்து கொண்ட போட்டிகளாக இடம்பெறவுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir



## குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படுகாயமடைந்தவர்களில் 12 பேர் யாழ்ப்பாணத்தில் இருந்து விடுமுறையில் தியத்தலாவை நோக்கிப் பயணித்த இராணுவத்தினர் என்று பொலிஸார் கூறினர்.

தியத்தலாவை – கஹகொல்ல என்ற இடத்தில் நேற்று அதிகாலை 5.20 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து விடுமுறையில் வீடு நோக்கிப் பயணித்த இராணுவத்தினரும் அந்தப் பஸ்ஸினுள் இருந்தமையால் அவர்களில் யாராவது ஒருவர் கொண்டுசென்ற கைக்குண்டே இவ்வாறு வெடித்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தியத்தலாவை நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸில் பயணம் செய்தவர்கள், மற்றொரு பஸ்ஸில் பண்டாரவளையில் இருந்து தெபரவெவ – தியத்தலாவை நோக்கிப் பயணம் செய்தபோதே குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

பஸ்ஸில் ஏற்பட்ட குண்டுவெடிப்பை அடுத்தே தீ பரவியதாகப் பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர். இதனால் அந்த பஸ் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 19 பேர் படுகாயமடைந்த நிலையில் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள 19 பேரில் 11 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பஸ்ஸின் சாரதிக்குப் பின்னாலுள்ள 3 ஆவது ஆசனத்தில் புகையுடன் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வட பகுதியிலிருந்து இராணுவத்தினர் விடுமுறையில் தென்பகுதிக்கு வரும்போது யாழ்ப்பாணத்திலிருந்து தியத்தலாவைக்குச் செல்லும் பஸ்ஸில் வந்து தியத்தலாவையிலிருந்து மற்றைய பஸ்ஸில் பயணிப்பது வழமையாகும்.

இந்நிலையில், வடபகுதியில் இருந்து விடுமுறையில் சென்ற இராணுவத்தினரும் வழமை போன்று இந்த பஸ்ஸில் பயணித்தபோதே குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கைக்குண்டு ஒன்று வெடித்ததன் காரணமாகவே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளதாக அரச பகுப்பாய்வு அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

பஸ் தீப்பிடித்த இடத்துக்குச் சென்ற பகுப்பாய்வு அதிகாரிகள் கைக்குண்டு ஒன்று வெடித்ததாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாகக் கண்டறிந்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் பணியாற்றி விடுமுறையில் திரும்பிய இராணுவத்தினரில் யாரேனும் ஒருவர் பாதுகாப்பற்ற முறையில் கைக்குண்டை எடுத்து வந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக, பண்டாரவளை மற்றும் தியத்தலாவைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நல்லாட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதமரின் இந்த அறிவிப்பை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமர வீரவும் உறுதிப்படுத்தினார்.

கூட்டு அரசு செயற்பாட்டில் இல்லாவிடின் அமைச்சர்களின் எண்ணிக்கை மாற்றியமைக்கப்படவேண்டும் என்பதுடன் தற்போது அமைச்சர்களாக உள்ளவர்கள் சட்டபூர்வமற்றவர்கள் என்றும் ஜே.வி.பியின் தலைவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவே கூட்டு அரசு தொடரும். இந்த உடன்படிக்கை தொடர்ந்தும் செல்லுபடியானதாகவே உள்ளது. அது இரத்துச் செய்யப்படவில்லை எனப் பிரதமர் ரணில் அங்கு குறிப்பிட்டார்.

தேசிய அரசு தொடர்பான உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டுவரவேண்டிய தேவை தற்போது இல்லை எனத் தான் கருதுவதாகவும் பிரதமர் கூறினார்.

இதேவேளை, தமக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் உள்ள தேசிய அரசு உடன்படிக்கை தொடர்ந்தும் செல்லுபடியான நிலையில் உள்ளதாகவும், அந்த உடன்படிக்கையிலிருந்து தாங்கள் விலகவில்லை எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீரவும் சபையில் உறுதிப்படுத்தினார்.

பிரதமரின் கருத்து தொடர்பில் விளக்கமளிக்குமாறு சபாநாயகர் கரு ஜயசூரிய கோரியமையை அடுத்தே அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பு வெளியானபோது சபையில் இருந்த அமைச்சர்களும், அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மேசைகளில் தட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (ஐ)

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே இராணுவப் பேச்சாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது இராணுவப் பேச்சாளரிடம், இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தன்று பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களுக்கு சமிக்ஞை காட்டியமை தொடர்பான சர்ச்சையுடன் சம்பந்தப்பட்ட பிரிகேடியர் பிரியங்க மீண்டும் நாட்டுக்கு அழைக்கப்படவுள்ளாரா? என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த இராணுவப் பேச்சாளர், புலம்பெயர் அமைப்பின் கோரிக்கைக்கு அமைவாக இவர் அழைத்து வரப்படவில்லை. மீண்டும் மீண்டும் இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்பட்ட விடயம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக இவர் அழைத்து வரப்படவுள்ளார். இது இராஜதந்திர ரீதியில் இடம்பெறும் வழமையான நடைமுறையாகும். – என்றார். (ஐ)

## குண்டுவெடிப்பினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யுள்ளது.

கடந்த 9 வருடங்களுக்கு முன்னர் போர்ச் சூழ்நிலையில் இருந்த கலாசாரம் நல்லாட்சி அரசின் கவனக்குறைவு காரணமாக மீண்டும் உருவாகப் பார்ப்பதாக அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் டி சொய்ஸா எச்சரித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

அந்தக் கட்சிக்கு ஆதரவளிக்கும் பிரதான பங்காளிக் கட்சியான கூட்டு எதிரணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களான காமினி லொக்குகே மற்றும் ரஞ்ஜித் டி சொய்ஸா ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

தியத்தலாவைப் பகுதியில் நேற்று அதிகாலை பஸ் ஒன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தைப் போர்க் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு ஒப்பிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் டி சொய்ஸா கருத்து வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 9 வருடங்களுக்கு முன்னர் பஸ் குண்டுவெடிப்பு என்ற கலாசாரம் இலங்கையில் இருந்ததை நினைவுபடுத்துகின்றோம். 9 வருடங்களுக்கு முன்னர் கெப்பிற்றிக்கொல்லாவ பகுதியில் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்புக்குப் பின்னர் மஹிந்த ஆட்சிக்கு வந்த பின்னர் அந்தச் சத்தம் நிறுத்தப்பட்டது. நாடு விடுதலையாகியது. ஆனால் இன்று (நேற்று) அதிகாலை கஹகொல்ல பகுதியில் பஸ் குண்டுவெடிப்பு ஒன்று இடம்பெற்றதா என்பது தொடர்பில் நாட்டுக்குள் வதந்திகள் பரவி வருகின்றன.

நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பாதுகாப்புப் பிரதானி இந்தச் சம்பவத்துக்கு என்ன காரணம் என்பதை வெளிப்படுத்த வேண்டும். இது யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பயணிகள் பஸ் எனக் கூறப்படுகிறது. எனினும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் என்று யாரும் இல்லை.

அமைச்சர் சாகல ரத்நாயக்க பதவி விலகியுள்ளார் என ஊடகங்களில் தெரியவந்த போதிலும், ஜனாதிபதி அது தொடர்பில் எதுவுமே தெரிவிக்கவில்லை. 9 வருடங்களுக்கு முன்னர் உலகில் மிகப்பெரிய ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த நாட்டில் பாதுகாப்பு இப்போது பூச்சியத்துக்கு வந்துள்ளது. அரசு ஒன்று இல்லை. சட்டம் இல்லை, தேர்தலுக்கான திகதியில்லை. உறுப்பினர்களும் இல்லை. இந்த அபாய நிலையிலிருந்து நாட்டை மீட் பதற்கான ஒரே வழி நாடாளுமன்றத் தேர்தலுக்கு செல்வதேயாகும். – என்றார். (ஐ)

## தியத்தலாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தியத்தலாவை – கஹகொல்ல பகுதியில் தனியார் பஸ் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பையடுத்து ஏற்பட்ட தீயில் சிக்கி 7 இராணுவத்தினரும் 5 விமானப்படையினரும் 7 பொதுமக்களும் காயமடைந்துள்ளனர்.

இருப்பினும், இது ஒரு பயங்கரவாதத் தாக்குதல் அல்ல. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என்றார். (ஐ)

## 9 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேலியே பயிரை மேய்ந்த கதையாகிவிட்டது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது கல்வி கற்பதற்காகவே. ஆனால், பாடசாலையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அதிபர், மாணவி ஒருவரை வன்புணர்வுக்குட்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது. எனவே இந்தக் குற்றவாளிக்கு வழங்கப்படும் தீர்ப்பு அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களுக்குப் பாடமாக அமையவேண்டும். – என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தமது தீர்ப்பில் கோடிட்டுக் காட்டினார்.

யாழ்.தீவகம் நாரந்தனைப் பகுதியிலுள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் 2009ஆம் ஆண்டு நவம்பர் மாத காலப் பகுதியில் தரம் 4இல் கல்வி கற்ற 9 வயது மாணவி ஒருவர் வன்புணர்வுக்குட்படுத் தப்பட்டார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. பாடசாலை அதிபரே தன்னை வன்புணர்வுக்குட்படுத்தினார் என்று மாணவி தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

இதனடிப்படையில் கைது செய்யப்பட்ட பாடசாலை அதிபர் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும், பாதிக்கப்பட்ட மாணவி நீதிமன்றின் உத்தரவில் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில், சந்தேக நபருக்கு எதிராகச் சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டை முன்வைத்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிஸாந்த் வழக்கை நெறிப்படுத்த, எதிரி சார்பில் சட்டத்தரணி பி.தவபாலன் முன்னிலையா கினர். இந்த நிலையில் வழக்கு தீர்ப்புக்காக நேற்று நியமிக்கப்பட்டது.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமியின் சாட்சி முன்வைக்கப்பட்டது. அத்துடன், சிறுமியின் தாயார் மற்றும் அவரது நண்பியின் சாட்சிகளும் மன்றில் முன்வைக்கப்பட்டன.

எனினும், சிறுமி நடத்தை கெட்டவள் என்று எதிரி தரப்பால் மன்றில் புதுக்கதை சோடிக்கப்பட்டது. 9 வயதுச் சிறுமி 2 இளைஞர்களுடன் பாலியல் தொடர்பை வைத்திருந்தாள் என அவளின் தாயார் கூறினார் என எதிரியும் அவரது மனைவியும் மன்றில் சாட்சியமளித்தனர்.

''இந்த விடயம் இப்போது தான் எதிரி தரப்பால் வெளிப்படுத்தப்படும் கதையாகும். எனினும், எதிரி தரப்பால் மன்றில் முன்நிறுத்தப்பட்ட ஆசிரியர்கள், மாணவியின் நடத்தைக்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளனர். எனவே சிறுமியால் கூறப்பட்ட சாட்சியத்தையும் மருத்துவ அறிக்கையையும் வைத்து இந்த மன்று எதிரியைக் குற்றவாளியாக அறிவிக்கின்றது.

“குற்றவாளி பாடசாலை அதிபர். அவரின் கட்டுப்பாட்டுக்குள்தான் பாடசாலை உள்ளது. அவரின் முழுக் கட்டுப்பாட்டுக்குள்தான் மாணவி உள்ளார். அரச அலுவலர் ஒருவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பெண்களையோ சிறுவர்களையோ பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்துவது கடுமையான குற்றமாகும். அவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்குவது கட்டாயமானதாகும்.” – என்று நீதிபதி தீர்ப்பை அறிவித்தார்.

குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு குற்றவாளி 10 இலட்சம் ரூபா இழப்பீட்டை வழங்கவேண்டும். அதனை வழங்கத் தவறின் 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும். தண்டமாக 5 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும். தவறின் ஒரு மாதகால கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பில் தெரிவித்தார். (ஐ–7)

## அன்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வர் இரா.சம்பந்தனுக்குப் பதிலளித்துள்ளார்.

தாமரை மொட்டிலிருந்து தான் தமிழீழம் மலரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

“உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன 44.69 வீத வாக்குகளை பெற்றுள்ள போதிலும், இவை பொய்கள் மூலமாக பெறப்பட்ட வாக்குகளாகும். தமிழீழ கதைகளை கூறியே சிங்கள மக்களை ஏமாற்றி இந்த வாக்குகளை பெற்றுள்ளனர். நீங்கள் இது போன்று தொடர்ந்து நடந்து கொள்வீர்களேயானால், ஈழம் மலர்ந்து விடும். தாமரை மொட்டில் இருந்து தான் அந்த ஈழம் மலரும்.” – என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிடப்பட்டிருந்தது.

அதற்கு டுவிட்டரிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். (ஐ)

## நல்லாட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கடந்த 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி ஏற்படுத்திய நல்லாட்சி அரசு தொடர்பான இரண்டு வருட கால ஒப்பந்தம், கடந்த 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

அதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக எவ்வித தீர்மானமும் எடுக்கப்படாத நிலையில், உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. அதன் காரணமாக நல்லாட்சி அரசை நீடிப்பது தொடர்பில் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்நிலையில், அதற்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படுமென அமைச்சர் ராஜித நேற்றுத் தெரிவித்தார். (ஐ)

# ஐ.நா. அமைதிப் படையில் இருந்து இலங்கை அதிகாரி இடைநிறுத்தம்



லெபனானில் ஐ.நா. அமைதிப் படை நடவடிக்கைகளில் ஈடுபடுத் தப்படவிருந்த லெப்டினன்ட் கேணல் ஹேவகேன்ற இலங்கை இராணுவ உயரதிகாரியை ஐ.நா. தடுத்து நிறுத் தியுள்ளது.

ஐ.நா. அமைதிப்படை நடவடிக் கைகளில் பங்கேற்க லெபனானுக்கு அனுப்பப்படவிருந்த இலங்கை இராணுவத்தின் 150 பேர் கொண்ட அணிக்கு லெப்டினன்ட் கேணல் ரத்னபுலி வசந்தகுமார ஹேவகே என்ற அதிகாரி பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் 2008 - 09 ஆம்ஆண்டு காலப்பகுதியில் போர் நடவடிக் கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந் தவர் என்றும், இவர் பற்றிய மனித உரிமை ஆய்வுகள் மேற் கொள்ளப்படவில்லை என்றும் மனித உரிமை ஆர்வலர்கள் கரி சனை எழுப்பியிருந்தனர்.

இந்த நிலையில், இவரை லெபனானில் ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்து வதை ஐ.நா. தடுத்துள்ளது.

இதுகுறித்து இன்னர்சிற்றி பிரஸ் ஊடகத்துக்கு கருத்து வெளியிட் டுள்ள ஐ.நா. பொதுச்செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் - லெபனானில் ஐ.நா. இடைக் காலப் படையில் நிறுத்தத் திட்டமிடப் பட்டிருந்த இலங்கை இராணுவ அதிகாரி, மீளாய்வு முடியும் வரை அங்கு அனுப்பப்படுகின்றமை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

முழுமையான மீளாய்வுக்குப் பின்னரே, அவரை அங்கு நிறுத்து வதா என்பது குறித்து முடிவு செய் யப்படும்.

இந்த இராணுவ அதிகாரியின் பின்னணி தொடர்பாக நாம் இலங் கையின் விதிவிடப் பிரதிநிதியுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். அவர்கள் எமது விசாரணைகளுக்கு முழுமையாக ஒத்துழைக்கிறார்கள்.

மனித உரிமை மீறல்கள் பற் றிய அறிக்கைகளை ஐ.நா. மிகத் தீவிரமாக எடுத்துக் கொள்ளும்.

கொள்கைகளின் அடிப்படை யில், ஐ.நா. உடன் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களும் உயர்ந்தசெயல்திறன், திறமை, நேர்மை ஆகியவற்றை கொண்ட வர்களாகவும், மனிதஉரிமைகளுக்கு மதிப்பளிப்பவர்களாகவும், அர்ப்ப ணிப்புள்ளவர்களாகவும் இருக்கின் றமையை உறுதிப்படுத்த வேண்டி யது எமது கடப்பாடாகும்.- என்று தெரிவித்துள்ளார்.

# நிமாலைப் பிரதமராக்குவதற்கு 120 எம்.பிக்கள் ஆதரவாம்!

## உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, பெப். 22

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவைப் பிரத மராக்குவதற்கு 120 உறுப்பினர்களின் ஆதரவு உள்ள தென பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

பிரதமரை பதவிநீக்க அரசாங்கம் கால தாமதப் படுத்தி வருவதன் ஊடாக மக்களின் எண்ணங்களை புறந்தள்ளி வருகின்றது. மக்களின் அபிலாஷைகளை புறக்கணித்து பெரும் செல்வந்தர்களின் எண்ணங் களுக்கு அமைய நாட்டை முன்கொண்டு செல்லத் தற் போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அத்தோடு, இரண்டு தலைவர்களும் இணைந்து இந்த ஆட்சியை ஒற்றுமையாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் தமது நாடாளு மன்ற உரையில் குறிப்பிட்டுள்ளார். அப்படியாயின் அரசாங்கத்தை பாதுகாப்பதே எதிர்க்கட்சித் தலை வரினதும், பிரதம அமைப்பாளரினதும் நோக்கம் என் பது ஹன்சார்ட் பதிவிருந்து அறிந்து கொள்ள முடியும்.

நாம் பெரும் பான்மை பலத்துடனேயே உள்ளோம். - எனக் கூறினார்.

# சிங்கப்பூரிலிருந்து மகேந்திரனை கொண்டு வர சட்டம் இல்லையாம்.!

## பேராசிரியர் பீரிஸ் கூறுகிறார்

சிங்கப்பூருக்கும் இலங்கைக்குமிடையில் எவ்வித உடன்படிக்கையும் இல்லையென்பதால் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வரமுடியாது என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் அமைச் சருமான பேராசி ரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டு எதிரணியின் ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதன் போது அவர் மேலும் கூறுகையில் -

அர்ஜுன் அலோசியஸ் மற்றும் குறித்த நிறுவனத் தின் நிறைவேற்றதிகாரி கசுன் பலிசேனஆகியோரை மாத்திரம் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். ஆனால் மகேந்திரன் உல்லாசமாக சிங்கப்பூரில் வாழ் கிறார். அவரை நாட்டுக்கு கொண்டுவருவ தற்கான வழி வகைகள் இல்லை. ஏனெனில் அதற்கான உடன்படிக் கைகள் எவையும் இரு நாடுகளுக்குமிடையில் இல்லை.

மேலும் 2015ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவை 45 உறுப்பினர்களின் ஆதரவு இருக் கும் நிலையில் ஜனாதிபதி உயர்நீதிமன்றின் பொருட்கோடல் பெறாத நிலையில் பிரதமராக நியமித்தார். ஆகவே ஜனாதிபதி தற்போது உயர்நீதிமன்றிடம் பொருட்கோடல் செய்வது தார்மீகம் இல்லை. ஜனாதிபதி உடனடியாக நாடாளு மன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். - எனக் கூறினார்.

# விடுதலைப் புலிகள் போராளியை இன்று இலங்கைக்கு நாடு கடத்துகிறது ஆஸி.

கொழும்பு, பெப். 22

விடுதலைப் புலிகளின் முன் னாள் போராளியான சாந்த ரூபன் தங்கலிங்கம் (வயது-46) இன்று ஆஸ்திரேலிய அரசாங்கத்தினால் இலங்கைக்குத் திருப்பி அனுப் பப்படவுள்ளார்.

இந்த நிலையில், தாம்இலங் கைக்குத்திருப்பி அனுப்பப்பட்டால், சித்திரவதை செய்யப்படுவதற்கும், கொல்லப்படுவதற்கும் கூட வாய்ப்பு கள் உள்ளன என, சாந்தரூபன் அச் சம் வெளியிட்டுள்ளார்.

தம்முடன் இணைந்து போரா டிய இரண்டு முன்னாள் போராளி களுக்கு, விடுதலைப் புலிகளுடன் இணைந்திருந்தமைக்காக ஆஸ்தி ரேலியா அடைக்கலம் அளித்துள்ள அதேவேளை, தமக்கு அடைக்கலம் மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

இவர்தாம் விடுதலைப்புலிகளுக் காக சண்டைப் படகுகளை வடிவ மைத்தவர் எனக் கூறியுள்ளார்.

ஆனால், சாந்தரூபனின் பின் னணி தொடர்பாக சந்தேகம் கொண் டுள்ளதாகவும், அவர் விடுதலைப் புலிகளால் பயிற்சி அளிக்கப்பட்ட வர் என்பதற்கோ, படகுத் தளத்துக் குப் பொறுப்பானவராக இருந்தார் என்பதற்கோ எந்த ஆதாரமும் இல்லை என்றும் ஆஸ்திரேலிய அரசாங்கம் கூறியுள்ளது.

அதேவேளை, தங்கலிங்கம் சாந்தரூபன் ஆபத்தில் இருக்கிறார் என்பதில் எந்தக் கேள்விக்கும்இட மில்லை எனத் தமிழ் அகதிகள் பேரவை தெரிவித்துள்ளது.

தாம் நாடு கடத்தப்பட்டால், இலங்கை படைகளால் சித்திரவதை செய்யப்பட்டு, காணாமல் ஆக்கப் படக் கூடும் என்று அவர் அச்சம் கொண்டுள்ளார் என்றும் தமிழ் அகதிகள் பேரவையின் தலைவர் ஆரன் மயில் வாகனம் தெரிவித் துள்ளார்.

அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 19 வயதில் இணைந்த சாந்த ரூபன், இனிய வன் என்ற பெயரில் இயங்கியவர் என்றும் இவர் புலிகள் இயக்கத் தின் முன்னணிப் பங்கு வகித்து வந்தவர் என்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவர் விடுதலைப் புலிகளின் படகு கட்டுமான முகாமைத்துவத் துக்கு பொறுப்பாக இருந்தார் என் றும், போரில் பங்கெடுத்தாரா என் பது தெளிவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, முன்னாள் போராளியான மனோகரன் தன பாலசிங்கமும், இனியவன் விடு தலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் என்றும், அவர் படகுப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு ஆஸ்திரேலி யாவில் அடைக்கலம் தேடிய சாந்த ரூபனின் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அவர் தற்போது குடிவரவு தடுப்பு முகாமில் வைக் கப்பட்டுள்ளார். அவரை இன்று நாடு கடத்தவுள்ளதாக ஆஸ்திரே லிய எல்லைப் படை அறிவித்துள் ளது.

## அம்பாறையில் மாற்றலாகிச் சென்ற வைத்தியர்களின் சம்பளப் பெயரில்

# 4 வருடங்களாக ஒரு கோடி 10 லட்சம் ரூபாவை சூட்சுமமாகச் சுருட்டிய அரச பெண் ஊழியர்

## மாடி வீடு கட்டி குடிபுகுந்த வேளை சிக்கினார்

காரைதீவு பெப். 22

இடமாற்றலாகிச் சென்ற வைத் தியர்களின் சம்பளப் பணத்தை 4வருடங்களாக சூட் சுமமான முறையில் ஏப்பமிட்ட வர் எனக் கூறப்படும் சுகாதாரத் திணைக்கள பெண்ஊழிய ரொருவர் மாட்டியுள்ளார்.

அவ்வாறு அவர் சுருட்டிய பணம் ஒரு கோடி 10லட்சம் ரூபா வைத்தாண்டுவதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

விசாரணையின்போது அவர் தான் இம்மோசடியைச்செய்த மையை ஒப்புக்கொண்டுள்ளார். பெரும் துணிகர பணமோசடி அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பிராந்தியக்காரியால யத்தில் இடம்பெற்றது.

இப் பிராந்தியத்தில் பலத்த பரபரப்பை ஏற்படுத்திய இச்சம் பவம் பற்றி மேலும் தெரியவரு பவை வருமாறு:-

இடமாற்றலாகிச்சென்ற 5 வைத்திய அதிகாரிகளினது சம் பளப்பணத்தை அம்பாறை நகரி லுள்ள ஐந்து வெவ்வேறு வங்கிக் கிளைகளில் தனது கணவரின் பெயரில் திறக்கப்பட்ட வங்கிக் கணக்கிற்கு கடந்த 4வருடங்க ளாக இவர் அனுப்பிவந்துள்ளார்.

இப்பெரும் மோசடியைச் செய்த அப்பெண்மணி மகாஓய கல்விவலயத்தில் முன்னர் பணி யாற்றி இடமாற்றலாகிகடந்த 2013 முதல் சுகாதாரப்பணிமனையில் கடமையாற்றி வந்துள்ளார்.

இவரது கணவர் இராணுவத்தி லிருந்து இடைநடுவில் கைவிட்டு வந்தவரென்று விசாரணைகளி லிருந்து தெரியவருகின்றது.

கிழக்கு மாகாண பிரதம கணக்காய்வாளர் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளில் முதற்கட் டத்தில் இப்படி மோசடி செய்யப் பட்ட பணம் 95 லட்சம் ரூபா என அறியவந்தபோதிலும் அடுத்த கட்ட விசாரணையின்போது இத்தொகை ஒரு கோடி 10லட்சம் ரூபாவைத் தாண்டுவதாக பிரதம கணக்காய்வாளர் எச்.எம்.ஏ. றசீட் தெரிவித்தார்.

இப்பெரும்பணமோசடிசெய்த அவர் அம்பாறை நகரில் அதி நவீன மாடிவீடொன்றைக் கட்டி யுள்ளார். அத்துடன் பல இடங் களில் காணி மற்றும் வீடுகளை யும் கொள்வனவு செய்துள்ளார்.

தான் புதுமாடிவீட்டின் புது மனை புகுவிழாவிற்காக அலு வலகத்தில் லீவு எடுத்திருந்த வேளை அக்காலப்பகுதி சம்பளம் வழங்கும் காலமாகையால் தற் காலிகமாக வேறொரு அலு வலரை அந்தப் பணிக்கு அமர்த் தியவேளை இம்மோசடி அம் பலத்திற்கு வந்தது.

தனது புதுமனை குடிபுகுந்த அன்றே அவர் மாட்டியுள்ளார். பொலிஸ் வீட்டுக்காவலில் அவர் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரி கிறது.

விசாரணையின்போது 2013 முதல் 2017 டிசெம்பர் வரை தான் மோசடி செய்த பணத்தைத் தாம் மீளச்செலுத்துவார் என அந்தப் பெண் ஊழியர் ஒப்புக்கொண் டுள்ளார். தொடர்ந்து விசாரணை முன்னெடுத்துச் செல்லப்படு கின்றது. (உ)

காலைக்கதிர்
Kalaikkathir



# ஸ்ரீகாந்தா பொறுப்பற்ற பேச்சு

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி காட்டம்

- எஸ்.நிதர்ஷன் -

பொறுப்பற்ற விதமாகப் பேசுகின்றார் ரெலோவின் ஸ்ரீகாந்தா என விமர்சித்திருக்கின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன்.

தமிழ் மக்களின் நலனடிப்படையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இணைந்து செயற்படவேண்டுமென்று வடக்கு – கிழக்கைத் தளமாகக் கொண்டிருக்கும் சகல தமிழ்க் கட்சிகளுக்கும் ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா விடுவித்துள்ள அழைப்புக் குறித்தும், உள்ளூராட்சி மன்றங்களில் கூட்டமைப்பு பெரும்பான்மைபெற்ற இடங்களில் வேறு கட்சிகள் ஆட்சிமைப்பதற்கு உதவத் தங்கள் தரப்பில் யாரும் ஒடு காலிகள் இல்லை என அவர் தெரிவித்துள்ள கருத்துக் குறித்தும் கேட்டபோதே கஜேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறிக்காந்தா ஒரு மூத்த அரசியல் வாதி. சிரேஷ்ட சட்டத்தரணி என்பது மட்டுமல்லாமல் நீண்ட அரசியல் அனுபவங்களைக் கொண்டவர். ஆனால் அவர் இப்போது அரசியல் பரப்பில் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாகவே பொறுப்பற்ற விதமாகப் பேசிவருகின்றார். இதன் காரணமாகவே பொறுப்பற்ற வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டு வருகின்றார்.


தமிழ் மக்களின் நலனடிப்படையில் செயற்படுவதற்கு எல்லோரும் இணையவேண்டுமென்று சொல்வதென்பது தமிழ் மக்கள் எல்லோரையும் அடிமுட்டாள் என்று நினைத்துக் கொண்டு கூறும் கூற்று என நாம் நினைக்கின்றோம். அவர் கூட்டமைப்பின் பங்காளி களில் ஒன்றான ரெலோ அமைப்பைச் சார்ந்தவர். அவரின் கட்சியும் நாடாளுமன்றில் அங்கத்துவம் பெற்றுள்ளது.

அரசியல் யாப்பை தயாரிக்கும் செயற்பாடுகளில் அவர் அங்கம் வகிக்கும் கூட்டமைப்புதான் பௌத்தத்திற்கு முன்னுரிமை, வடக்கு – கிழக்கு இணைப்பு இல்லை, ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டு தமிழர்களை சவக்குழிக்குள் தள்ளுதல் என எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கின்றது. இந்த நேரத்தில் நாங்களும் அவர்களுடன் சேர்ந்து இந்த இனத்தை சவக்குழிக்குள் வீழ்த்த வேண்டுமென்றா அவர் அழைப்பு விடுக்கின்றார் என நாம் கேட்கின்றோம்.

மேலும் அவர் சட்டத்தரணி என்பதற்காக அவர் சொல்கின்ற எல்லாவற்றையும் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று அவர் மனப்பால் குடிக்கக் கூடாது என்பதனையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இதேவேளை இரகசிய வாக்கெடுப்பைக் கோருவது ஜனநாயக உரிமைதான். அவ்வாறு இவர்களுக்கு வசதியானபோது இரகசிய வாக்கெடுப்பென்றும் அவர்களுக்கு வசதியில்லாதபோது அது நாகரிகமல்ல என்றும் கூறுவது தங்கள் அரசியல் நலன்களுக்காகவேதான்.

நாம் மாநகரசபையில் எங்கள் கட்சி சார்பில் ஒருவரைப் பிரேரிக்க உள்ளோம். நாங்கள் மாநகர சபையில் ஆட்சிமைப்பதற்கு யாரிடமும் ஆதரவு கோருவதில்லை என்ற நிலைப்பாட்டில் மிகத் தெளிவாக இருக்கின்றோம். எனவே ஈ.பி.டி.பியிடமோ அல்லது கூட்டமைப்பிடமோ எமக்கு ஆதரவை வழங்குமாறு நாம் கோரவில்லை என்பதுடன் இனிமேலும் கோரப் போவதில்லை என்பதையும் கூறிக்கொள்கின்றோம். – என்றார்.




# ஆஸி. புதிய பாதுகாப்பு ஆலோசகர் இராணுவத் தளபதியைச் சந்தித்தார்!

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதரகத்தின் புதிய பாதுகாப்பு ஆலோசகர் இலங்கை இராணுவத் தளபதியைச் சந்தித்துள்ளார்.

மேற்படி பாதுகாப்பு ஆலோசகரான குரூப் கப்டன் சீன் அன்வின், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவைச் சந்தித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் கடந்த வாரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது இவ்விருவருக்கும் பல்வேறுபட்ட கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் இரு நாடுகளிற்கும் இடையிலான பரஸ்பர உறவுகளின் முக்கியத்துவம் தொடர்பில் அதிகம் கவனமெடுத்து பேசப்பட்டதாக இலங்கை இராணுவத் தரப்பை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகி யுள்ளது. (ஜ)




# ஊழல் பெருச்சாளியான ரணிலை பாதுகாக்கவே சுமந்திரன் முயற்சி

## செல்வராஜா கஜேந்திரன் சாட்டை



- எஸ்.நிதர்ஷன் -

ஐக்கிய தேசியக் கட்சியின் எடுபிடியாக இருக்கின்ற சுமந்திரன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஊழல் பெருச்சாளிகளைப் பாதுகாக்கும் வகையிலையே செயற்பட்டுவருகின்றார் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் கட்சி அலுவலகத்தில் தாம் நடத்திய ஊடக சந்திப்பின்போது மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தமிழில் கிடைக்காதமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சபையின் அவதானத்திற்கு கொண்டுவந்ததால் சபையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டு அந்த அறிக்கை மீதான விவாதம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பது குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற மைத்திரி – ரணில் கூட்டு அரசில் 11 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் ஊழல் நடந்துள்ளதாக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் உள்ளிட்ட பலருக்குத் தொடர்பு இருப்பதாகவும் குற்றஞ்சாட்டப் பட்டிருக்கின்றது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் பெரும் வாக்கு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. அத்தோடு அரசியல் ரீதியான பல்வேறு பாதிப்புக்களும் ஏற்பட்டிருக்கின்றன. அந்த ஊழல் விவகாரத்தில் சிக்குண்டு இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவிற்கு முண்டுகொடுப்பதற்கான நடவடிக்கைகளிலேயே சுமந்திரன் ஈடுபட்டு வருகின்றார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் எடுபிடியாக திரிகின்ற சுமந்திரன் அக் கட்சியைப் பாதுகாக்கின்ற வகையிலையே நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். ஏனெனில் தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டம் அச்சமயம் தமிழில் இல்லை என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கூறியபோது அவரைத் தொடர்ந்து பேசவிடாது பிரதமர் இடைநிறுத்தியிருந்தார். ஆனால் அந்த நேரத்தில் சபையில் இருந்த கூட்டமைப்பினர் அது குறித்துப் பேசவில்லை.

ஆனால் இப்போது மட்டும் தமிழ்ப் பிரதி இல்லை என்று எதற்காக கேட்கின்றனர்? யாரைக் காப்பாற்றக் கேட்கின்றனர்? அவர்களது முழுச் செயற்பாடும் ஐக்கிய தேசியக் கட்சியையும் அதன் தலைவரையும் பாதுகாப்பதற்கே ஆகும். மேலும் நல்லாட்சி என்று சொல்லிக் கொண்டு ஊழல் நிறைந்த ஆட்சியே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. – என்றார்.




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.